


# வளரி

## நல்ல கவிதை பேசுவோம்

புரட்டாதி 2023 (செப்டம்பர் 2023) தி.பி 2054 கருவி 15 வீச்சு 04

## கவிப்பேராசான் மீரா நினைவேந்தல் சிறப்பிதழ்





கவிஞர் அய்யப்ப மாதவனுக்கு
'கவிப்பேராசான்' மீரா விருது


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆதிராமுல்லை | 02 | சுதாமாணிக்கம் | 13 | சு. ரெசினா பானு | 28 |
| அருணாசுந்தரராசன் | 04 | கவிஞர் பாலா | 14 | பா. செயப்பிரகாசம் | 29 |
| 'கவிப்பேராசான்' மீரா | 05 | துரை. அறிவழகன் | 16 | மு. முருகேஸ் | 34 |
| சிங்கப்பூர் அம்பிகா | 06 | வளவ. துரையன் | 20 | பொன் குமார் | 37 |
| அறிவுமதி | 07 | ஆரையூர் தாமரை | 22 | எழுத்தாளர் சுஜாதா | 38 |
| பழநிபாரதி | 08 | பாலைவன லாந்தர் | 23 | மு. மேத்தா | 39 |
| பவேரா | 09 | கலைமகள் | 24 | அய்யப்ப மாதவன் | 40 |
| செல்மா மீரா | 11 | அருணாசுந்தரராசன் | 25 | அழ. பகீரதன் | 43 |

# கவிஞர் அய்யப்ப மாதவனுக்கு 'கவிப்பேராசான்' மீரா விருது



*வளரி கவிதை இதழின் ஈராயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டுக்கான 'கவிப்பேராசான்' மீரா விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் கவிஞர் அய்யப்ப மாதவன்.*

*சத்தமின்றிக் கவிபாடும் வித்தகர் கவிஞர் அய்யப்ப மாதவன சிவகங்கை மாவட்டம் நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்தவர்.*

*அலட்டல், ஆரவாரம் எதுவும் இல்லாமல் ஒரு தவம் போலக் கலைப் படைப்புகளைத் தொடர்ந்து தந்து கொண்டிருப்பவர். கவிஞர், குறும்பட இயக்குநர், கவிதையைப் போல ஒளிப்படங்களைத் தரும் ஆகச் சிறந்த ஒளிப்படக் கலைஞர் என்று பன்முகம் காட்டும் ஆளுமை அய்யப்ப மாதவன்.*

*'தீயின் பிணம்', 'நானென்பது வேறொருவன்', 'மழைக்குப் பிறகும் மழை', 'நீர்வெளி', 'பிறகொருநாள் கோடை', 'எஸ் புல்லட்', 'நிசி அகவல்', 'சொல்லில் விழுந்த கணம்', 'குரல்வளையில் இறங்கும் ஆறு', 'குவளைக் கைப்பிடியில் குளிர்காலம்', 'ஆப்பிளுக்குள் ஓடும் ரயில்', 'தனிமைப்படுத்துதல்', 'உரையாடலில் பெரும் மழை', 'எங்கோ தெரியவில்லை அந்த வெள்ளை நிறப் பறவை', 'நரகத்தின் உப்புக்காற்று', 'இமை நடனம்', 'யாமினி', 'புத்தனின் விரல் பற்றிய நகரம்' என 17 கவிதைத் தொகுப்புகளைத் தமிழ்க் கவிதை இலக்கியத்திற்குத் தந்திருக்கிறார். 'தேர்ந்தெடுத்த கவிதைகள்' என்று பிற கவிஞர்களின் கவிதைகளைத் தேர்ந்துத் தொகுப்பு நூலாக்கியவர். 'பாலும் மீன்களுமே வாங்கிக் கொண்டிருந்தவள்' என்னும் சிறுகதைத் தொகுப்பையும் 'லிங்கு கவிதைகள்' என்ற தலைப்பில் இயக்குநர் லிங்குசாமியின் கவிதைகள் பற்றிய திறனாய்வு நூலையும் எழுதியுள்ளார்.*

*திரைப்படத்தின் மீதான பெருங்கனவோடு பல குறும்படங்களை இயக்கிக் கொண்டிருப்பவர். பனி வீடு, சிகப்புச் சுடி வேணும்ப்பா, இன்று (கவிதைக் குறும்படம்), ரோஸம்மா ஆகிய நான்கு குறும்படங்களை இயக்கியுள்ளார். இவரது 'ரோஸம்மா' குறும்படம் தந்தை மகள் பாசப் பரிதவிப்பை அரைமணி நேரத்தில் காட்டும் அற்புதமானதொரு காவியம்.*

*கவியுலகத்தாலும் திரையுலகத்தாலும் நன்கு அறியப்பட்டவர் அய்யப்ப மாதவன்.*

*திரைப்பட ஒளிப்பதிவாளர் செழியனும் அய்யப்ப மாதவனும் நெருங்கிய நண்பர்கள். செழியன் மூலம் மீரா அவர்களோடு அறிமுகம் ஏற்பட்டு, அவருடன் நெருக்கமான கவிதைத் தொடர்பில் இருந்தவர்.*

*'தீயின் பிணம்', 'நானென்பது வேறொருவன்', 'மழைக்குப் பிறகும் மழை', 'நீர்வெளி', 'பிறகொருநாள் கோடை' ஆகிய அய்யப்ப மாதவனின் ஐந்து கவிதைத் தொகுப்புகளை மீரா அவர்கள் தமது அன்னம் பதிப்பகம் மூலமாகப் பதிப்பித்து வெளியிட்டிருப்பது நினைவுகூரத்தக்கது.*



*இவரது பதினெட்டாவது கவிதை நூலான 'உன் பெயர் நட்சத்திரம் அல்ல' மீராவின் புதல்வர் கதிர் அவர்களால் அன்னம் வெளியீடாக கடந்த மாதம் வெளியாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.*

*மீராவிடமிருந்து தனது இலக்கியப் பயணத்தைத் தொடங்கியவரும் மீராவோடு நெருங்கிய தொடர்பில் இருந்தவருமான கவிஞர் அய்யப்ப மாதவன் அவர்களுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான வளரியின் 'கவிப்பேராசான்' மீரா விருதி'னை வழங்கிச் சிறப்பிப்பதில் வளரி கவிதை இதழும் வளரி 15 விழாக்குழுவும் பெருமை கொள்கின்றன.*

*பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17 ஞாயிறு அன்று கும்பகோணத்தில் நடைபெறவிருக்கின்ற வளரியின் 15 ஆம் ஆண்டு தொடக்க விழாவில*

*பெருமதிப்பிற்குரிய அண்ணன் பாவலர் அறிவுமதி அவர்கள் கவிஞர் அய்யப்ப மாதவனுக்கு 'கவிப்பேராசான்' மீரா விருது வழங்கி விழாப் பேருரையாற்விருக்கிறார்.*

**- முனைவர் ஆதிரா முல்லை**

தேர்வுக் குழுவுக்காக

களத்தினில் வீழ்த்திடும் எதிரியை– வளரி
எழுத்தினில் உயர்த்திடும் கவிதையை


## ஆசிரியர் குழு:

**நிறுவுநர்- ஆசிரியர்:**
*அருணாசுந்தரராசன்*

**முதன்மை ஆசிரியர்:**
*அழ. பகீரதன் (இலங்கை)*

**பொறுப்பாசிரியர்:**
*மருத்துவர் கோ. தென்றல் (தமிழ்நாடு)*

**மதிப்புறு ஆசிரியர்**
*முனைவர் ஆதிரா முல்லை*

**முதன்மைப் பொறுப்பாசிரியர்:**
*மருத யாழினி (த.ச. பிரதீபா)*

**தலைமைத் துணையாசிரியர்கள்:**
*சாரதா (கனடா)*
*நா. மலர்விழி (மலேசியா)*
*சுதா மாணிக்கம் (தமிழ்நாடு)*

**முதன்மைத் துணையாசிரியர்கள்:**
*இரா.இராபியத் (தமிழ்நாடு)*
*சுகன்யா. அ (தமிழ்நாடு)*

**துணையாசிரியர்கள்:**
*சீதா சாமி (பிரான்சு)*
*ச. அன்பு வடிவு (சிங்கப்பூர்)*
*இராதை (மலேசியா)*
*ஜெனிதா (இலங்கை)*

## அயலக ஆசிரியர் குழு:

1. *ஆரையூர் தாமரை (ஜெர்மனி)*
2. *மிதயா கானவி (சுவிட்சர்லாந்து)*
3. *முகிலன் வேழினி (பிரான்சு)*
4. *பத்மினி (கனடா)*
5. *சர்மினி (டென்மார்க்)*
6. *சுகந்தலட்சுமி (ஐக்கிய அரபு அமீரகம்)*
7. *அ. இரஞ்சிதா (இலங்கை)*
8. *மருத்துவர் பா. அனிதா (அபுதாபி)*
9. *யோகராணி (நோர்வே)*
10. *கலைமகள் (இங்கிலாந்து)*
11. *மரீனா இல்யாஸ் (நியூசிலாந்து)*
12. *அ. ரெங்கநாயகி (கத்தார்)*
13. *முனைவர் பிரியா (சார்ஜா)*
14. *ஆ. முருகேசுவரி (சவூதி அரேபியா)*
15. *அருட்சகோதரி சகாய அரசி (இத்தாலி)*

**சட்ட ஆலோசகர்:**
*வழக்கறிஞர் சே. சென்னம்மாள்*



மின்னஞ்சல்: *valaripoems09@gmail.com*
தொடர்புக்கு: *+91 78715 48146*


**வளரி இதழ்களை வாசிக்க :** https://valari09.blogspot.com/

# இதற்குத்தானா கொண்டாட்டம்?



ஏழுபத்து ஐந்தாண்டுகள்
ஏங்கிக் கிடக்கின்றோம்
ஏழ்மை நீங்கவில்லை
வறுமையின் நிறமும் மாறவில்லை

தேசியக் கொடியென்று
குத்தி மகிழ்றோம் சட்டையில்
எங்களைச் சட்டை செய்யாமல்
முதுகில் குத்திச் சாய்க்கிறது தேசியம்

இந்தியன் என்று  இறுமாந்திருக்கிறோம்
ச்சீ! தள்ளி நில்
நீ தீண்டத்தகாதவன் என்கிறார்
பூனைகள் விரட்டும் எலிகளாய்
மிரண்டு மிரண்டு வாழ்கிறோம்

எங்களுக்கான உணவை
அவர்கள் தீர்மானிக்கிறார்கள்
எங்களின் தேவைகளையும்
அவர்களே முடிவு செய்கிறார்கள்
விடுதலைக்கு முன்பே வித்திட்ட
வழிநிலை நின்று
அடக்கி ஒடுக்கி ஆளத் தலைபடுகிறார்கள்

ஐம்பத்து ஆறு  தேசங்களாய்
விரிந்திருந்த எங்களை
இந்தியக் கொட்டடியில்
அடைத்துவைத்தார் வெள்ளையர்.
மொழி என்றால் இந்தியாம்



மதம் என்றால் இந்துவாம்
சமஸ்கிருதம் மகத்துவமாம்

பழங்குடிகளுக்குப் பக்கத்தில் மட்டும்
இரண்டு காட்சிகள்
உயர் பதவிக்கு ஒன்று
நிர்வாண ஊர்வலத்தோடு
வன்புணர  மற்றொன்று

வேளாண்மை முடக்கிட
முனைப்பு காட்டுகின்றார்
காவிரியின் கதை முடிக்க
 கணக்கொன்று தீட்டுகின்றார்

இதுதான்
இன்றைய  இந்தியா ?
இதற்குத்தானா
சுதந்திரக் கொண்டாட்டம்?

அருணாசுந்தரராசன்

# எதிர்காலத் தமிழ்க் கவிதை ।(4)

'கவிப்பேராசான்' மீரா

## புதுக்கவிதையின் எதிர்காலம்:

கருவறையிலிருந்து வந்தவுடனேயே கல்லறைக்குப் போய்விடும் என்று ஆருடம் சொன்னவர்கள் அதிசயத்தக்க வகையில் புதுக்கவிதை இன்று கம்பீரமாக ஊர்வலம் வருகிறது.

பத்திரிகைகள் பன்னீர் தெளிக்க, பதிப்பகங்கள் மலர் தூவ, மன்றங்கள் வாழ்த்தி வரவேற்கின்றன. மரபுக்குப் பாசறையாக விளங்கும் பல்கலைக்கழகங்களும் இப்போது புதுக்கவிதைக்கு மணவறையாக மாறியுள்ளன.

இந்த மாற்றத்தைத் தம் கண்ணுக்கு முன்னர் கண்ட பிறகே புதுக்கவிதையின் தந்தை ந.. பிச்சமுர்த்தி மறைந்திருக்கிறார். திசைகாட்டும் கருவி இல்லாத காலத்தில் எச்சரிக்கைகளை மீறி கடலில் நெடுந்தூரம் பயணம் செய்தான் கொலம்பஸ்; பின்னர் அமெரிக்காவுக்குச் செல்ல வழிவகுத்தான். முதலில் தன்னந்தனியாகப் புதுக்கவிதை முயற்சியை மேற்கொண்ட ந . பிச்சமுர்த்தி ஏறத்தாழக் கொலம்பஸைப்போல் ஒரு துணிச்சல்காரர்தான். 'காட்டில் பயணம் செய்யும் முயற்சி' என்று அவரே தம் அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் போட்ட பாதை இன்று புதுக்கவிதைக்கு ராஜபாட்டையாகிவிட்டது.

புதுக்கவிதையின் எதிர்காலத்தைக் கணிப்பதற்கு முன் அதன் வரலாற்றையும் வளர்ச்சியையும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது நல்லது.

## புதுக்கவிதையின் மூன்று கட்டங்கள்



வசதிக்காகப் புதுக்கவிதையின் காலகட்டத்தை மூன்றாகப் பகுக்கலாம். 1930 முதல் 1940 வரை முதற்கட்டம்; ''மணிக்கொடி' யும், 'கலா மோகினி' யும் புதுக்கவிதைக்கு மேடை அமைத்த காலம். 1960 முதல் 1970 வரை இரண்டாவது கட்டம்; 'எழுத்தும்' 'நடையும்: புதுக்கவிதைக்கு ஒத்திகை நடத்திய காலம். எழுபதுக்குப் பிறகு மூன்றாவது கட்டம்; 'கசடதபற' வும் 'வானம்பாடி:யும் புதுக்கவிதையை அரங்கேற்றிய காலம்.

முதற்கட்டத்தில் - நாற்பதுகளில் 'வசன கவிதை' என்னும்

பெயரில் புதுக்கவிதை அழைக்கப்பட்டது. பாரதியின் 'காட்சிகள்' எனும் வசனகவிதைப் பகுதியும் அமெரிக்கக் கவிஞன் வால்ட் விட்மனின் 'புல்லின் இதழ்கள்' எனும் கட்டற்ற கவிதை (Free Verse) தொகுதியும் தான் தமிழ்ப் புதுக்கவிதையின் ஊற்றிடங்கள்.

மரபுக் கவிதையில் எதுகையும் மோனையும் எதேச்சாதிகாரம் செலுத்துவதாகவும் அவற்றின் இரும்புக்கரங்களில் கருத்துக்கள் சிக்கித் திணறுதாகவும் ஓர் எண்ணம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏறக்குறைய எல்லா நாட்டிலும் தலைதூக்கியது. அதன் விளைவாக யாப்பு எதிர்ப்பு வேகம் பெற்றது.

('புதுக்கவிதையின் எதிர்காலம்' என்ற தலைப்பில் 17.11.1977 அன்று திருச்சி அகில இந்திய வானொலியில் 'கவிப்பேரரசான்' மீரா ஆற்றிய உரை)

- மீதி ஐப்பசி இதழில்

# சிங்கப்பூர் அம்பிகா கவிதைகள்

01

## நம்பிக்கை

உன்னைப் பார்த்ததும்
பூவைப்போல் மலரும் புன்னகை
உன் மீதான
நம்பிக்கையின் வெளிப்பாடு
அது உயர்வானது
உன்னதமானது
ஒருபோதும் அதை
உதாசீனப்படுத்தி விடாதே!

02

## மனம்



எல்லா நிலையிலும் சிறந்தவர்
எவருமில்லை என்பதால்
நம் மனதுக்குப்
பிடித்தமானவர்களின்
தவறுகளைக் களைந்து
அவர்களைத்
தக்க வைத்துக் கொள்ளவே
தீர்மானம் நிறைவேற்றுகிறது மனம்

# நெல்லி மனிதர்

நினைக்க நினைக்க நெடுநாள் இனிக்கும்
நெல்லி மனிதர்
நெருஞ்சிகள் சலித்த நெகிழ்வுப் பேச்சில்
உயிரின் நுனிவரை
ஊறி நனைத்தவர்

கவிதைப் பெருக்கில் கடல் செயும் ஆற்றல்
கைவரப் பெற்றும்
குளமாய்த் தன்னைக்
குறைத்துக் கொண்டவர்

புதிதாய்ப் புதிதாய் எழுத வருபவர்
ஏக்கம் தீர்க்க
பதிப்பக மதகைப்
படக்கெனத் திறந்து
ஆறு கண்டவர் அதிலும்
வரலாறு கண்டவர்

இங்கிதமான காதல்
தமிழிலும்
அங்கதமான அரசியல் தமிழிலும்
முன்னேர் நடத்திய
முதல்வர்

பயணப்பட்டுப் பயணப்பட்டே
பலருக்குத் தாயானவர்
தனக்குத்தானே அதனால் நோயானவர்
கறுப்பின் போக்கும் சிவப்பின் நோக்கும்
உள்வாங்கியதனால்
இயக்கமானவர்
என்றும் என்றும்
பெரியார் மார்க்சின்
அணுக்க மாணவர்
குழுத்தமிழ் நெருப்பில்
குதித்து எழுந்தவர்
கொடுமைச் சிறையில்
உதித்து எழுந்தவர்
இறுதி எழுத்திலும்
உறுதி நிறுத்தி
இனச்செயல் போரை
ஏற்றிச் சொன்னவர்
எமக்கென தனிக்கொடி
ஏற்றச் சொன்னவர்

அன்னமே
அவரது சிகரம்
அவரது
எண்ணமே
எங்களின் அகரம்



பாவலர் அறிவுமதி

# ஒற்றைப் பெயர்

*மீரா...*
*ஓராயிரம் பெயர்களை*
*ஊட்டி வளர்த்த*
*ஒற்றைப் பெயர்*

*விண்மீன்களைப் பாடவிட்டு*
*உற்றுக்கேற்ற*
*இருளின் இசை*

*மழையின் கவிதை*

*அன்பின்*
*விதைகளுக்குள் குறுகுறுத்த*
*உற்சாகத்தின்*
*தட்பவெப்பம்*

*எப்படிப் போட்டாலும்*
*பூ விழும் நாணயம்*

*கிழிந்த வலியை உணர்த்தாமல்*
*காற்றின் கனவுவெளியில்*
*மிதந்துகொண்டிருக்கிறது*
*அன்னத்தின் சிறகுபோல*
*அந்தப் பக்கம்...*





பழநிபாரதி

# மீராவைத் தின்று தீர்த்ததே தீ...

'பவேரா'
மானாமதுரை, தமிழ்நாடு

கண்ணில் படுவதெல்லாம்
கட்டித் தழுவிவர
முன்னைப் பழம்பெருமை
மூத்த மரபோடு
பின்னைப் புதுக்கவிதை
எம்முன் கிளர்ந்துவர
சொல்லிக் கொடுத்தனையே...
சொக்கிட வைத்தனையே...!
**

சொல்லும் முறையினில்
சொல்வரிசைச் சிக்கனத்தில்
வில்லின் கணையாக
வேகங்கொள் பாநடையில்
எள்ளல் சுவையோடு
துள்ளும் அழகோடு
பொல்லாப் புரட்டுலகின்
புன்மைச் சமுகக்
கிழிசல்கள் தைக்கவே
'ஊசிகள்' தந்தனையே...!
**

நூலின் முகப்பினில்
நூதனம் பாய்விரிக்க
வாளின் ஒளிவீச்சாய்
வண்ணம் பளபளக்க
பாலின் சுவையினிதாய்
பக்கங்கள் தேன்சொரிய
ஏலும் புதுமையுடன்
ஏராள நன்மையுடன்
அன்னம் அகரம்
வழியாகப் புத்தகங்கள்
ஆயிரம் பல்லாயிரமாய்
வாசிக்கத் தந்தனையே...
வாசிப்பு மீதெம்மை
நேசிக்க வைத்தனையே...
**

புவிக்குலம் போற்றும்
கவிக்குல வேந்தன்...!
திராவிடத் தென்றல்...!
பொதுவுடைமைப் பூங்கா
புராணப் புனைசுருட்டுப்
பொய்களின் வைரி...!
புன்னகை மன்னன்...!
கனவிலும் காதல்
கவிபாடும் தும்பி...!
மரபின் இலக்கண
மண்வாசத் துள்ளே
புறப்பட்டு வந்தாய் ...
புதுக்கவிதைப் பூ தந்தாய்...!
**

அகரம் வழியாக
ஆயிரமாய்ப் பாயிரமும்
'அன்னம் விடு' தூதும்
அச்சில் பதிப்பித்தாய்...
பாரதியைப் போல
நவகவிதைத் தோரணங்கள்
பாவரிசை ஊர்வலங்கள்
தேடித் தினம் கொடுத்தாய்...!
**

பொந்தாய் மரபுவெறும்
கூடாகிப் போனதனால்
செந்தழல் சேதிகளைச்
செப்பிவர வென்றே... நீ
சிற்றிதழ் வானில்
சிறகு விரித்தாயே...
ஓர்
வானம் பாடியாய்
உயரப் பறந்தாயே...
**

வீதியில் போதையிலும்
வீசி நடக்க இயலும்
சாதீகளைச் சாடுகிற
சங்கத் தமிழ்... நீ...
வலது மணிக்கட்டில்
கடிகாரம் பார்க்கும்
'இடதுசாரி' என்றே நீ
எல்லார்க்கும் காட்டினையே...
**

பிள்ளைக் கனியமுதாய்
பேசும் பொற் சித்திரமாய்
மருத்துவர் சுடர்தந்தாய் ...
தம்பி கதிர் தந்தாய்...
கள்ளம் கபடில்லாக்
கண்மணியைத்  தந்தனையே ...
**

நேசம் மறவாத
நெஞ்சம் அகலாத
பாசத் துணைவி
பகல் நிலவாய்த் தேய்ந்தழுக
பாதியிலே விட்டுப்
படக்கென்று போயினையே...
**

நெஞ்சுள் கிடந்ததை
வாய்திறந்து பேசாமல்
கொஞ்சமும் சைகைக்
குறிப்பேதும் காட்டாமல்
மேலும் ஒருநாள்
ஒரேயொரு நாள் நீ
உயிரோடு (இ)ருக்காமல்
ஆலமரம் இங்கே
அடியோடு பேர்ந்து
விழுதோடு வீழ்ந்தாற்போல்
வேரோடு சாய்ந்தனையே...
அய்யோ... கவியரசே...
மெய்யாய்ப் பறந்தனையே...!
**

கனவுகள்+ கற்பனைகள்=
காகிதங்கள் என்றே
நெடுங்கவிதை சொல்லி
நிசமாக்கிப் போனவனே ...
கவிக்கோ விருதினைச்
சென்னையிலே பெற்றுவந்தாய்...

வைகைக் கரையிலும்
பாராட்டு நல்கிட
உன்னை அழைத்திட்டோம்
உன்இசைவைக் கேட்டிருந்தோம்...
கண்ணிமைக்கும் நேரத்தில்
மாரடைப்பு வந்துன்னைக்
கண்மூட வைத்ததுவே...
காலன் கொடுஞ்செயலால்
சிந்தை கலங்கிச்
செயலிழந்து போனோமே...
**

சிந்தும் விழிநீரில்
சேர்ந்து கரைந்தபடி
சோர்ந்து மனங்குன்றி
சோகங்கள் மீறிவிட
கன்னிப் புதுக்கவிதை
கண்ணீர் உகுத்தபடி
முந்திவந்து நின்று முகம்
தேம்பி அழுதாளே...
"மீரா..! உன் வாழ்க்கை
கவிதையாம்... என் வாழ்க்கை;
நீ வாழ்ந்த காலமே
நான் வாழ்ந்த... காலம்...
அருமைஎன சீர்பெருமை
ஆர் உணர்வார் நாளை... ?
நெருப்பில் விழுவேன்...
மரணம் (எ)னைத் தின்னட்டும்..."

மீராவைச் சுட்ட தீ
நீளநெடு நாக்கோடும்
கோர முகத்தோடும்
குப்பென்று பற்றியதே...
கண்ணிமைக்கும் நேரத்தில்
காட்டுப் பசிதீர
அண்ணன் உடலை
புதுக்கவிதைப் பொன்னுடலை
தின்று முடித்ததே
தீ!
***



# ஓடிக்கொண்டிருக்கும் நதியாக அப்பா!


செல்மா மீரா

நெய்வேலி, தமிழ்நாடு


சிவகங்கை வீட்டின் அரணாக நிற்கின்ற அரசமரத்தின் சருகுகள் எல்லாம் அப்பா கடந்து வந்த பாதைகளை அசைபோட்டுக் கொண்டேயிருக்கின்றன. அப்பாவின் விரல்கள் தொடும் புத்தகங்களைக் காற்று உச்சிமுகர்ந்து புரட்டிக் கொண்டேயிருக்கிறது.

என் அப்பாவுடனான வாழ்நாள் பயணங்கள், கட்டுமீறிய அவரது செயல் ஓட்டத்தின் பிரமிப்புகளுக்குள் ஈடு கொடுக்க முடியாமல், அதே சமயத்தில் அவரது பணிகளின் அசாத்திய சுறுசுறுப்பினைக் கண்டு உள்வாங்கிய கண்களைப் பெற்ற நான் இன்னும் அந்த விந்தையிலிருந்து மீளவேயில்லை.

பட்டாம்பூச்சியாய்ச் சுற்றித் திரியும் மனமதில் மகிழ்ச்சியின் எல்லையில்லாத தருணமதை நிரப்புவது என்பது ஒவ்வொரு மகளுக்கும் அப்பாவிடமிருந்து கிடைக்கப்பெறும் வெகுமதியாகவும் சுதந்திரமாகவும் பார்க்கின்றேன். என் வாழ்வின் மிகப்பெரிய பலமும் கூட.

அப்பாவுடன், அவர் செல்லும் கவியரங்கங்கள், இலக்கிய விழாக்களுக்குச் செல்வதைப் பிடித்தமான பழக்கமாக வைத்துக்கொண்டிருந்தேன். புரியாத விழிகளுடன் அப்பா பேசி முடித்தவுடன் என்னிடமிருந்து கைதட்டல்கள் பலமாக இருக்கும். அப்பாவிற்குக் கைகள் தட்டுவதற்காகக் கிளம்பிய என் நோக்கம் நிறைவேறிய பெருமிதத்துடன் உள்ளூர மழையை முத்தமிட்டது போன்றதொரு பேருவகை.

இலக்கியம் வேரூன்றிய தடங்கள் அதன் திசைகள் இன்றும் அடைகாத்துக் கொண்டிருக்கின்ற இனிய நினைவுகளுக்குள் பாரதி நூற்றாண்டு விழாவின் மகிமைகளும், மண்ணின் வரலாற்றுச் சிறப்புமிக்க பக்கங்களும் என்றும் சிவகங்கையின் அடையாளங்கள்.

வீட்டின் நுழைவாயிலில் மகாகவி பாரதி எப்பொழுதும் கம்பீரமாக வீற்றிருப்பார். பாரதியின் தரிசனம் எல்லோருக்கும் கிடைத்திட்ட பெரும்பலம். அப்பாவுக்கு பாரதி தெய்வம். அந்தத் தெய்வத்திற்கு எடுத்த பெருவிழா பாரதி நூற்றாண்டு விழா எனும் இலக்கியத் திருவிழா. இடைவிடாது பெய்கின்ற மழை போல் இலக்கியத்தின் வாசனை காலை முதல் இரவு வரை கொட்டிக்கொண்டேயிருந்தது நிலப் பரப்பெங்கும். அந்த சுவாரசியத்தின் சுவடுகள் இன்னும் என் கண்களுக்குள் சுழன்று கொண்டே யிருக்கின்றன. தொடர்ச்சியான பயணங்களும், ஓர் இயந்திரம் போல் பணியாற்றிக் கொண்டிருந்த வேலைப் பளுக்களும் எதுவுமே மலைப்பாகத் தெரியாமல், ஓடிக்கொண்டிருக்கும் நதி போல, அப்பா விரைந்தோடிக் கொண்டிருந்தார். கடலில் மோதி எழுகின்ற அலைகளின் சத்தம் போல் பாரதி பற்றிய பேச்சும் உரை வீச்சும், கலந்துரையாடல்களின் ஆரவாரமான மகிழ்ச்சி. இசை, நாடகம், நடனம் கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம் என காலை முதல் இரவு வரை, பாரதிக்குப் பிடித்தமான சீர்வரிசைகள் படைக்கப்பட்ட நிகழ்வுகள் நிலைகொண்டிருந்தன. வீரம் விளைந்த மண்ணில் இலக்கியம்



பாடுபொருளானது.



பள்ளிச் சிறுமிகளின் நடனத்தில் நானும் கலந்து கொண்ட இனியதருணம் இன்றும் மீட்டிக் கொண்டிருக்கிறது இசையாக. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்து, மக்கள் வெள்ளத்தில் இலக்கியப் பேருரையாற்றினார். மூன்று நாள்கள் நடந்த பெருவிழாவில் இலக்கிய ஆர்வலர்கள், அரசியல் ஆளுமைகள் எனப் பலரும் கலந்து கொண்ட சிறப்புமிக்க விசைகள் யாவும் அரண்மனை வாயிலில் ஒளிர்ந்த வண்ண விளக்குகளையும் மிஞ்சுகின்ற ஆற்றலுடன் வசீகரிக்கும் சக்தியாக ஆட்கொண்டதன் வெளிச்சம் இன்றும் எதிரொலிக்கின்றது.

அப்பாவுடன் வாழ்ந்த அந்த விலைமதிப்புமிக்க நாள்களில் இலக்கிய மேதைகள் பலரையும் கண்டு ரசித்த பொழுதுகள் ஏராளம். பல எழுத்தாளர்கள் தங்களது எழுத்தின் முதல் விதையை விதைத்த பெருமை சிவகங்கைக்கு உண்டு. தன் இயக்கமே பெரிதெனச் சுற்றிச் சுழல்கின்ற மனிதர்கள் மத்தியில் எழுத்தின் மீதான ஆர்வம் கொண்ட எவரையும் உற்சாகப்படுத்துவதும், அரவணைப்பதும் விருந்தோம்பல் செய்வதிலும் யானை பலத்துடன் இயங்கிக் கொண்டிருந்தார் அப்பா.

இலக்கிய விழாக்களின் ஈர்ப்பு விசையாக விளங்கிய சிவகங்கைக்கு எழுத்தாளர் சுஜாதா அவர்கள் வருகை புரிந்திருந்தார்கள் . நான் பள்ளியிலிருந்து வந்தவுடன் அப்பாவைப் பார்ப்பதற்கு அவரின் அறைக்குள் ஓடுகிறேன். புத்தகங்கள் நிரம்பிய அப்பாவின் அறைக்குள் சுஜாதா அவர்களின் வருகையால் சிரிப்பின் அலைகள் குதித்தோடிக் கொண்டிருந்தன. அப்பாவின் நட்பின் நீண்ட பட்டியலில் எழுத்தாளர் ஜெயகாந்தன், கவிஞர் முடியரசன், கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் சிற்பி, கவிஞர் அப்துல்காதர்,

கவிஞர் மு மேத்தா, கவிஞர் பாலா, கரிசல் இலக்கிய மேதை கி.ரா இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். அப்பாவின் நட்பில் மகிழ்ந்த ஆளுமைகளின் அன்பினைப் பெற்ற பாக்கியசாலியானேன். கடவுளைக் கண்டுணர்ந்த பக்தனின் பரவசநிலையினை, நிறைவானதொரு நினைவாக இன்றும் சுடர் விட்டெரிகின்றது. அப்பா, கவிக்கோ அப்துல் ரகுமான், பேராசிரியர் இ. பாலசுந்தரம் மூவரும் அன்பில் ஒன்றாய் இணைந்தே இருந்தார்கள். இவர்களது செல்லச் சண்டைகளும் உரிமையுடன் கூடிய விவாதங்களும் கடந்துபோன நாள்களில் கடக்க முடியா ஈர்ப்பலைகள்.

கல்லூரிப் பணியும் அச்சுத் துறையும் அப்பாவின் அதிகப்படியான நேரத்தினை முடக்கிப் போட்டாலும் சோர்வு ஏதுமின்றி மீண்டு விடுவார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கி மதுரை பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தொடங்கப்பட்ட MUTA வில் தீவிரமாகக் களமிறங்கி, சிறை சென்று செயலாற்றியது மட்டுமின்றி, மன்னர் துரைசிங்கம் கல்லூரியை அரசுடைமை யாக்கும் பெரும்பொறுப்பினை ஏற்று அதில் வெற்றியும் பெற்றார். அப்பாவின் கவிதைகள் அரசியல் களங்களிலும் குதித்துக் கவிமுழக்கம் செய்தன.




“தெய்வங்கள் திருநாட்கள் எங்கட்கில்லை
தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்?” பேரறிஞர் அண்ணாவை ஈர்த்த கவிதை இது.
என் கல்லூரி நாள்களில் கவிதைப் போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டேன்.

வரிகளில் பற்றாக்குறை இருப்பினும் என்

முயற்சிக்கான அட்சதையைத் தூவி என்னை எழுதுவதற்கு ஊக்கப்படுத்தி ரசித்துப் போற்றிய முதல் ரசிகர் அப்பா தான். நான் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்து அழகு பார்த்த அவரது விழிகள், என் பாடங்களில் சந்தேகங்களைத் தீர்த்துவைப்பதிலும் தளர்ச்சி காட்டியதேயில்லை. ஆங்கிலக் கட்டுரைகளையும் மொழிபெயர்த்துத் தமிழ் வாசத்துடன் தந்த அழகான நாள்கள் இன்னும் என் நினைவுகளில் இளைப்பாறுகின்றன.

இயல்பாகவே என் செயல்கள் யாவும் அப்பாவின் அன்பின் எல்லைகளுக்கு உள்பட்டதாகவே அமைந்து விட்டன. அது, எத்தனையோ நேரங்களில் என் உயிரின் எல்லா நற்பண்புகளையும் இனிமையையும் விழிப்புறச் செய்தன.

அப்பாவின் கனவுகளின் மெய்ப்பாடாய்த் தொடங்கப்பட்ட அகரத்தின் பதிப்புப் பணிகள் இன்று முழுவீச்சில் அண்ணன் கதிர் அவர்களால் புதிய புதிய உத்திகளுடன் பிரகாசிக்கின்றன. அன்பைப் பெறுவதும் அன்பைக் கொடுப்பதும்

நம் பாரம்பரியத்தின் அடையாளமாகும். கி.ரா அவர்களின் படைப்புகளை ஒன்பது தொகுதிகளாக வெளியிட்டு பேரன்பினைக் கொடுத்துள்ளார் அண்ணன் கதிர்.

எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தாகி விட்டது எல்லா மனிதருள்ளும் வலைவீசியாயிற்று உங்களைப் போல் ஒருவர் என் கண்ணில் படவேயில்லை அப்பா!

# அறிவால் வெட்டு

நடுங்க வைக்கிறது
நாங்குநேரி
அடங்க மறுக்கிறது
அறிவு ஏறி
சாதி போதையில்
சகட்டு மேனிக்கு வெட்டு
அறிவுக்கு ஒரு வெட்டு
ஆற்றலுக்கு ஒரு வெட்டு
பொறுமைக்கு ஒரு வெட்டு
புத்திசாலித்தனத்திற்கு ஒரு வெட்டு
நிமிர்ந்து நின்ற நெஞ்சுக்கு ஒரு வெட்டு
கூனிக் குறுகி
கும்பிடு போடாமல்
கல்வி கற்றதற்கு
கண்ட இடமெல்லாம் வெட்டு
குழந்தைகளை வெறியூட்டிய வீணர்களுக்குத்
தெரியவில்லை
அரசன் அன்று கொல்வான்
கல்வி நின்று கொல்லும்
கல்வி வெட்ட வெட்டத் துளிர்க்கும்
ஆயிரம் காலத்துப் பயிர்
பெரியார் கொடுத்த உயிர்



சுதா மாணிக்கம்
கும்பகோணம் தமிழ்நாடு

# மீராவின் கவிதை நேர்த்தியும் உரைநடை அழகும்

கவிஞர் பாலா



தமிழ்க் கவிகள் பலர் கவிதை எழுதுவார்கள். ஆனால் கவிதை பற்றிப் பேச மாட்டார்கள். கவிதை ஆக்கத்தைப் பற்றி அதன் சூட்சுமங்கள் பற்றி தமக்கு உள்ளும் வெளியும் நின்று கருத்துரைக்கும் பணி அபூர்வமாகவே கவிஞர்களிடம் காணப் படுகிறது. படைக்கின்றவர்களை விட சுவைக்கின்றவர்கள்தான் கவிதையின் நீள அகலங்கள் பற்றி, ஆக்கங்கள் அர்த்தங் களாகவோ அனர்த்தங்களாகவோ ஆவது பற்றி அதிகம் பேசியிருக்கிறார்கள்.

தமிழில் மரபுக்கவிதை காலம் வரை கவிதை விமர்சனம் கவி களிடமிருந்து பிறக்கவில்லை . புதுக்கவிஞர்களின் வருகைக்குப் பின்னர் தான் கவிதைபற்றிக் கவிஞர்களின் உரையாடல் அதிகம் இடம்பெற்றது எனலாம். அதற்கான தேவையையும் காலம்தான் உருவாக்கியது. மரபுக் கவிதைக்கும் புதுக்கவிதைக்கும் நடந்த போராட்டத்தில் புதுக்கவிஞர்கள் கவித்துவம் பற்றியும் உள்ளடக்கம் பற்றியும் ஒரு புறம் பேச, மரபுக்கவிகள் உருவம் பற்றியும் கவித்துவம் பற்றியும் எதிர்வாதம் செய்ய 'எது கவிதை' என்ற ஆய்வு கூர்மையும் சுவையும் மிளிர வெளிப்படத் தொடங்கியது.

பாரதி மேலைக் கவிஞர்கள் கீழைக் கவிஞர்களைத் தொட்டுக் காட்டினான். ந. பிச்சமூர்த்தி தொடங்கி இன்றுவரை பல கவிகள் கவிதையின் அடிமுடி தேடும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து நடந்த கருத்தரங்குகள், ஆய்வரங்குகளில் கவிஞர்கள் தத்தம் கொள்கைகளை வெளியிட நிர்ப்பந்தமும் வாய்ப்பும் நேர்ந்தது. விளைவாக புதுக்கவிதைக் காலத்தில் கவிதை இயக்கத்தை விட கவிதை பற்றிய சர்ச்சையே அதிகம் நடந்தது எனலாம். மேலைநாட்டில் கோல்ரிட்ஜ், வேர்ட்ஸ்வர்த், ஆர்னல்ட், எலியட், யேட்ஸ், பவுண்டு போன்ற கவிகள் கவிதை பற்றி அதிகம் பேசியுள்ளது போல தமிழில்



ந. பிச்சமூர்த்தி, சார்வாகன், மீரா, மு.மேத்தா, அப்துல் ரகுமான், ஞானக்கூத்தன், தருமு சிவராமு, சிற்பி போன்ற கவிஞர்கள் கவிதை குறித்துக் கூறியுள்ளவை கவனத்திற்குரியன.

இன்றைய தமிழ்க்கவிதை உலகில் முன்னணி கவிஞர்களில் ஒருவர் கவிஞர் மீரா. அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதியவை, பேசியவை இங்கு நூல்வடிவில் தொகுக்கப் பெற்றுள்ளன. இவை கறாரான விமர்சனத் தொனியில் அமையவில்லை. சந்தர்ப்பம், சூழல், கட்டுரை எழுதப்பெற்ற காலம் ஆகியவற்றின் நிர்ப்பந்தங்கள் கட்டுரையில் தூக்கலாகத் தெரிகின்றன. தான் சுவைத்து மகிழ்ந்த மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகளை அறிமுகப்படுத்துவதில் பிற கவிஞர்களிடம் இல்லாத பரந்த மனப்பான்மையையும் கவிதைகளின் சிறப்பம்சங்களைத் தொட்டுக் காட்டுவதில் அபூர்வமான புலமை ரசனையையும் காணலாம்.

எல்லா கட்டுரைகளிலும் ஒரு சமூகச் சார்பு நிலையை கவிஞர் மீரா வற்புறுத்துகிறார். ஆனாலும் கவிதையின் அழகம்சங்களை இழந்துவிட சம்மதிப்பதுமில்லை. சான்றாக ஞானியின் 'கல்லிகை' கவிதையை 'கவிதையில் கற்பனை' என்ற தலைப்பில் வைத்து விமர்சிப்பது மீராவின் அணுகுமுறைக்கு ஒரு சோற்றுப் பதம் எனலாம்.

'எதிர்காலத் தமிழ்க்கவிதை' என்ற முதற் கட்டுரை 1973இல் எழுதப்பட்டிருக்கிறது. புதுக்கவிதையை முழுவதுமாக ஏற்றுக் கொள்வதில் ஒரு தயக்கம் அப்போது பலருக்கு இருந்தது.. கவிஞர் மீராவுக்கும் இருந்திருக்கிறது என்பது தெரிகிறது.

'Modern poetry' என்பதை புதுக்கவிதை என்று அவர் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அதற்கு ஒரு விரிந்த பொருள் தருகிறார். யாப்புள்ள கவிதை, யாப்பற்ற கவிதை , யாப்பு நெகிழ்ந்த கவிதை, உரைநடைக் கவிதை என்று சகல வடிவங்களையும் உள்ளடக்கியதாக 'புதுக்கவிதை' என்ற பதத்தை அவர் ஏற்றுக்கொள்வது ரசமான கருத்து. தமிழில் வேறு யாரும் இது மாதிரி அர்த்தப்படுத்திக் கொள்ளவில்லை என்று கருதுகிறேன். ஆனாலும் உள்ளடக்க ரீதியாக 'நடப்பியல் நெறியும் மார்க்சீய ஒளியும்' துலங்கும் கவிதைகளையே அவர் வரவேற்கிறார். புதுக்கவிதையை அதன் புதிய உள்ளடக்கத்திற்காகவே வரவேற்று அங்கீகரித்த கவியரசு மீராவை முதல் கட்டுரை அடையாளம் காட்டுகிறது.

இரண்டாவது கட்டுரை கவிதையில் கற்பனை பற்றியது. நூலில் மிகவும் நயமாக எழுதப்பட்ட கட்டுரை இது. மரபுக் கவிகளான மஹாகவி, கம்பதாசன், தமிழ்ஒளி, பொன்னிவளவன் ஆகியோரின் கற்பனையையும் புதுக் கவிஞர்களான காமராசன், தமிழவன், சிற்பி போன்றோரின் கற்பனைகளையும் உரசிப் பார்த்து மகிழுகின்றார்.

'பாடத்திட்டத்தில் புதுக்கவிதை' என்ற கட்டுரை பல்கலைக்கழக வளாகத்தில் மரபு வளர்க்காத ஆக்கப் பயிரை புதுமைக் கவிகள் தழைக்கச் செய்திருப்பதை பற்றியது. மாணவக் கவிஞர்களும் இளைஞர்களும் கவிதையின் பிரதேசத்தில் படிப்பும் படைப்பும் நிகழ்த்துவது பற்றிய விவரங்கூறும் கட்டுரை இது. 'எதிர்காலத் தமிழ்க் கவிதை' என்ற நூலுக்கு பொருத்தமான முடிப்புக் கட்டுரையாக அமைகிறது.

இந்தக் கட்டுரைகளில் தரப்பட்டுள்ள கருத்துகளை கவனமாக நோக்கும்போது கடந்த பத்தாண்டுகளில் புதுக்கவிதையின் வளர்ச்சியும் தெரிகிறது. அயர்ச்சியும் தெரிகிறது. கவிஞர் மீரா அவர்களின் கவிதைச் சிந்தனைகளில் ஏற்பட்ட படிப்படையான மாற்றங்களும் தெரிகின்றன.

இது மாதிரி கட்டுரைகள் கவிஞர்களால் எழுதப்படுவதில் ஒரு பெரிய நன்மை இருக்கிறது. கவிதையைப் படைக்கிறவர்களே சொல்லும்போது படிக்கிறவர்களுக்கு ஒரு புதுச் சுவை கிடைக்கிறது.

எதை எழுதினாலும் கவிதையின் நயத்தோடு எழுதும் ஆற்றல் உடையவர் மீரா. அவர் உரைநடை, எழுத்தில்கூட கவிதைக்குரிய வடிவக் குணம் (formal characteristics) அமைவதை நான் கவனித்து வந்துள்ளேன். இந்தக் கட்டுரைகளிலும் நான் அந்த நேர்த்தியைக் காண்கிறேன். 'புதுவை சட்டமன்றத் தேர்தலில் தோற்றாலும் பாரதிதாசன் என்றும் மக்கள் மன்றத்தின் பிரதியாக இருக்கத் தவறியதில்லை' என்ற வரிகளில் உள்ள முரண் தொடை அழகையும் 'நிலவைப் பற்றி இதுவரை வெளிவந்துள்ள கவிதைகள் நட்சத்திரங்களைப் போல் எண்ணற்றவை' என்று எழுதும்போது இயைபு அழகுமிக்க கிண்டல் தொனியையும் 'கவிதையின் கட்டழகைச் சரியாகக் காட்டுவதில் முரண் தொடைக்கு முக்கிய பங்கு உண்டு' என்ற வரிகளில் உள்ள குறும்பையும் நாம் ரசிக்காமல் இருக்க முடியுமா?

கண்ணதாசனின் கவிதையை விட கண்ணதாசன் உரைநடையை கவிஞர் மீரா விரும்புகிறார். நான் அப்படிச் சொல்ல மாட்டேன். கவிஞர் மீராவின் கவிதை நேர்த்தியை எவ்வளவு விரும்புகிறேனோ அவ்வளவு தூரம் கவிஞர் மீராவின் உரைநடை அழகை ரசிக்கிறேன் என்று தான் சொல்வேன்.

(மீராவின் 'எதிர்காலத் தமிழ்க் கவிதை' நூலு எழுதிய முன்னுரையிலிருந்து...)

# ஐராவதி ஆற்றின் அழகியல் ஆன்மா மீரா

துரை. அறிவழகன்

காரைக்குடி, தமிழ்நாடு

ஒற்றைமுக தீபச்சுடர் கடத்தப்பட்டுக் கடத்தப்பட்டு பல விளக்குகளில் ஒளியைப் பல்கிப் பெருக்கும் அற்புதத்தை நிகழ்த்தும் செயல் போன்றதே கலை இலக்கிய மேதைகளின் நூல்களைப் பதிப்பாக்குவது. வாசிப்பு, எழுத்தாளர்களின் நேரடி அறிமுகம், செவிவழி உண்மைகள் என பலவிதமான தடங்களின் வழி கண்டடைந்த புதிய, இளம் எழுத்தாளர்களின் எழுத்துக்களை நூலாக்கியவர் கவிஞர் மீரா அவர்கள். வண்ணமயமான வண்ணத்துப்பூச்சி பூவுக்குப் பூ அமர்ந்தபடி பயணித்து நிகழ்த்தும் மகரந்தச் சேர்க்கைக்கு ஒப்பானதாகும் இவரின் பதிப்பகச் செயல்பாடு. வண்ணத்துப்பூச்சிகள் உருவாக்கும் பூக்காடுகள் பரப்பும் மணம் போல இலக்கிய மணம் பரப்புபவை மீராவின் "அன்னம் பதிப்பகத்தின் வெளியீடுகள்.

செவ்வியல் தன்மையிலான புதினங்களில் முக்கியத்துவம் வாய்ந்த நாவல் 'மா-னீ; கைப்பிரதி வாசிப்பிலேயே அதனை உணர்ந்தவர் மீரா அவர்கள். 1980இல் 'அன்னம்' வெளியீடாக முதல் பதிப்பு கண்டது 'மா-னீ.

நாவலாசிரியர் 'ஹெப்சிபா' அவர்களின் ஆன்மா இந்தப் புதினம். கதையின் ராணி கிரேஸ் அழகுமணியின் பர்மியப் பெயர் தான் மா-னீ. பர்மிய மண்ணின் மணத்துடன் எழுதப்பட்ட வரலாற்றுப் புதினம் இது. பர்மா மண்ணில் தான் கழித்த பால்ய நாள்களின் நினைவுகளை இரண்டாம் உலகப்போர் காலத்தின் பின்னணியுடன் செறிவாக உருப்பெறச் செய்திருப்பார் ஹெப்சிபா. மீரா அவர்களும் பர்மிய வாழ்வியல் வாசம் கொண்டவரே. அவரது பெற்றோர்கள் பர்மாவில் தொழில் செய்தவர்கள்: 'மா-னீ போல் பர்மிய பெயர் ஒன்றையும், பால்ய நினைவுகளையும் கொண்டவர் மீரா அவர்கள்.

'உறங்கும் கடல்' என்று வர்ணிக்கப்படும் பர்மாவின் வளம்மிக்க பாரம்பரிய ஆறு 'ஐராவதி'. அதன் அழகியல் துடிப்போடு தங்கள் பால்ய நினைவுகளைச் சுமந்தவர்கள் ஹெப்சிபாவும், மீரா அவர்களும். வேனில் காலத்தில் ஐராவதி ஆற்றிலிருந்து வீசும் குளிர் காற்றைத் தன் இதயத் துடிப்பாக கொண்டிருந்தவர் மீரா.

பர்மிய மண் வாசனை கொண்ட தன் பால்ய நினைவுகளை ஒரு புதினமாக எழுதிவிட வேண்டும் என்பதைத் தன் வாழ்நாள் கனவாகக் கொண்டு பயணித்தவர் மீரா அவர்கள்.

சிவகங்கை என்றவுடன் நினைவுக்கு வருவது மருது சகோதரர்கள் மட்டுமல்ல 'கவிஞர் மீரா' என்று அன்புடன் அழைக்கப்படும் 'மீ.இராஜேந்திரனும்' தான். வீரம் மட்டுமல்ல, கவிதையும், கலையும் செறிந்த செம்மண் பூமி சிவகங்கை; செறிவுமிக்க இலக்கியப் படைப்புகள் நூலாக மலர்ந்த தேவவனம். அண்ணா, பாரதிதாசன், மு.வ. போன்றோரின் எழுத்துக்களின் ஈர்ப்பால் கவிதை எழுதத் தொடங்கியவர் மீரா அவர்கள். மரபுக்கவிதையில் தொடக்கப் புள்ளி வைத்து நவீன வசன கவிதை நோக்கி நகர்ந்து, செழுமையான கோலம் வரைந்து தனது ஆளுமையை நிறுவியவர்.



பூமியின் அடியாழத்தில் கண்களுக்குத் தெரியாத அபூர்வ நீரோட்டம் போன்றது பால்ய நினைவுகள். இந்தப் பால்ய ரேகையின் இனிமை ஓடாத மனம் எவருக்கும் இருக்காது என நம்பலாம். இந்த நினைவுகள் சார்ந்த நிலம் என்பது, சிறு பறவைகளின் கீச்சொலிகளாலும், ஓடைகளின் சில்லிப்பாலும், குறுஞ்செடிகளின் பசுமையாலும், பனித்துளிகளாலும் நிறைந்தது. வளரிளம் பருவம் தாண்டிய பிறகு இந்த நினைவுகளை மீளுருவாக்கம் செய்து பார்க்கும் கணங்கள் கிடைப்பது என்பது அதி அற்புதமானது. ஒரு வண்ண ஓவியத்தின் மென்முறுவலாக என் நினைவில் தங்கியிருக்கும் எண்பதுகளில் என்னை வசீகரித்த ஆளுமை மீரா அவர்களின் ஞாபகம் தோன்றும்போது என் பால்ய நிலவெளியின் காட்சிகளும் தவிர்க்க முடியாமல் எனக்குள் கிளர்ந்தெழுந்து என்னை வியாபித்துக் கொள்ளும்.

அசோகா, வேம்பு, முதிர்ந்த அரசமரம், கண்மாய்கள், சிவன் கோவில் தெப்பக்குளம், குதிரை வண்டிப்பயணம் செம்மண் புழுதி என பால்ய நிலக்காட்சி அடுக்குகள் எனக்குள்ளும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. அப்பால்ய நிலத்தில் ஈரம் மாறாத நீர்ச்சித்திரமாக நண்பன் கதிரின் முகமும் காட்சிபெற்று நிலைத்திருக்கிறது. பத்து முதல் பதிமூன்று வயது வரையிலான சிவகங்கை நாள்களின் நீரோட்டம் நிரம்பிய தளிர் வேர்களும் அதன் நீட்சி கொண்ட நாள்களின் நினைவுகளிலும் மிகப்பெரிய பிம்பமாக உருக்கொண்டு என்னுள் வாழ்பவர் தான் மீரா அவர்கள். முற்றிய கதிர்களின் பால்வாடையாக என்னை நிறைத்து நிற்கிறார்கள் மீரா அவர்களும் அவர் குடும்பத்தினரும். எளிய அன்பும், உபசரணையும் கொண்டவர் மீரா அவர்களின் துணைவியார் சுசீலா அவர்கள். மீரா அவர்களின் வீடு என்பது எனக்கு மற்றொரு தாய் வீடு போன்றது.

ஐந்தாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை சிவகங்கை ‘சுவாமி விவேகானந்தர்’ பள்ளியில் நான் படித்த போது மீரா அவர்களின் மகன்கள் சுடர் மற்றும் கதிர் எனது பள்ளித் தோழர்கள். 2, சிவன் கோவில் தெற்குத் தெரு, சிவகங்கை எனும் முகவரி எனது ஆழ்மனத்தில் பொறிக்கப்பட்ட ரேகைகளாக இன்றுவரை உயிர்ப்புடன் இருக்கிறது.

அன்னம் பதிப்பகம், அகரம் அச்சகம் அடித்தளத்திலும், வீடு முதல் தளத்திலுமாக இயக்கம் கொண்டிருக்கும் மீரா அவர்களின் வேடந்தாங்கல்.

கி.ராஜநாராயணன், கந்தர்வன், பா.செயப்பிரகாசம், இன்குலாப், நாஞ்சில் நாடன் என மகத்தான ஆளுமைகளின் தொடக்க நாள்களின் நிலமாக அமைந்திருந்தது சிவகங்கை. இலக்கிய உலகில் இவர்கள் வேர்பிடித்து செழித்து வளர்ந்து நிற்க அரவணைத்து உற்சாகப்படுத்தியவர் மீரா அவர்கள். இளம் குருத்துகளாக முகம் காட்டிய படைப்பூக்கம் கொண்டவர்களை அடையாளம் கண்டு விருட்சமாக மாற்றும் தனிக்குணம் கொண்டவர் மீரா அவர்கள். வந்த விருந்தாளிகளுக்கும், வரப்போகும் விருந்தாளிகளுக்கும் மீரா அவர்களின் வீட்டு உலை கொதித்தபடியே இருக்கும்.

அன்னம் பதிப்பகத்தின் நுழைவு வாசலில் நம்மை வரவேற்று நிற்கும் மகாகவி பாரதியாரின் சித்திரம். அடுத்தாற்போல, மர மேஜையில் அடுக்கப்பட்ட மெய்ப்புகளை உன்னிப்பாக வாசித்து, சிவப்பு மையால் திருத்தங்கள் செய்து கொண்டிருப்பார் பெரியவர் தமிழாசிரியர் வரதராசன். நீண்ட நடு அறையில் பெண்களின் குரலொலியோடு அச்சுகோர்க்கும் வேலை நடந்துகொண்டிருக்கும். காலை 9.00 மணிக்கு ஒலிக்கத் தொடங்கும் டிரெடில் மிஷின் சத்தம் மாலை வரை ஓயாது. சில நாள்களில் பின்னிரவிலும் மிஷின் ஓட்டம் அடங்காது இயங்கிக் கொண்டிருக்கும். முகப்பில் நுழைந்தவுடன் வலது கைப்பக்கமாக அமைந்த அறையில் காட்சிப்படுத்தப்பட்ட புத்தகங்களுக்கு மத்தியில் கதிர் அமர்ந்திருப்பான். அதுதான் நாங்கள் சந்திக்கும் அறை. வீட்டு வாசலில் கிளை பரப்பி நிற்கும் முதிர்ந்த அரசமரத்தில் இருந்து வெளிப்படும் காற்றில் கலந்து ஒலிக்கும் பட்சிகளின் கீச்சொலியும், பச்சை வாசமும் அறையை நிறைத்திருக்கும்; வெக்கை அண்டாத அறை அது.

இலக்குமி அம்மாள் - மீனாட்சி சுந்தரம் தம்பதியினருக்கு 1938இல் பிறந்தவர் மீரா அவர்கள். பர்மாவில் தொழில் செய்துவிட்டு பூர்வீகம் திரும்பி சிவகங்கையில் குடியேறியவர்கள். மீராவின் பால்ய நிலம் பர்மா ஆகும். 1964இ ல் சுசீலா அவர்களைக் கைப்பிடித்தார் மீரா. சுடர், கதிர் மற்றும் கண்மணி செல்மா ஆகியோர் அவரின் குழந்தைகள்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் போது மீராவின் நெருங்கிய நண்பராகவும், வகுப்புத் தோழராகவும் இருந்தவர் கவிஞர் அப்துல் ரகுமான் ஆவார். மீராவின் இறுதி நாள்கள்வரை இந்த நட்பின் ஒளி குன்றாமல் நீடித்தது.

1962ஆம் ஆண்டில் சிவகங்கை மன்னர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியில் சேர்ந்த மீரா அவர்கள் பொறுப்பு முதல்வராகப் பதவி உயர்வு பெற்று பணியாற்றிய பின்னர்தான் ஓய்வு பெற்றார். மதுரை கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தொடங்கப்பட்ட ‘மூட்டா’ (MUTA) இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டதால் இரண்டு முறை பணி நீக்கம் செய்யப்பட்டார் மீரா. இக்காலகட்டத்தில் உருவானதுதான் ‘அன்னம்’ பதிப்பகம்.

கவிஞர் அப்துல் ரகுமான் வழங்கிய “கவிக்கோ” விருதும், கவிஞர் சிற்பி வழங்கிய ‘வாழ்நாள் சாதனையாளர் விருதும் மீரா அவர்களுக்குப் பெருமை சேர்த்தவை ஆகும். தரமான இலக்கியக் கூட்டங்களை சிவகங்கையில் இவர் நடத்தியுள்ளார். அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது “பாரதி நூற்றாண்டு” விழா” நிகழ்வாகும்.

2, சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கையில் மீராவின் காலத்தில் இயங்கிய ‘அன்னம்-அகரம்’ அச்சகம் / பதிப்பகம் படைப்பாளிகளின் வேடந்தாங்கல் மட்டுமல்ல; நவீன இளம் படைப்பாளிகளின்

சிருஷ்டி விதைகளை விழிப்புறச் செய்த விதை நிலமும் கூட. அவ்விலக்கிய குடிலில் கூடிய பறவைகளில் இன்று வானில் வெற்றிகரமாகச் சிறகு விரித்து வலம் வருபவர்களில் முக்கியமானவர்கள் ‘செழியன்’ மற்றும் ‘அய்யப்ப மாதவன்’. இவர்கள் கவிஞரின் மகன் கதிரின் நண்பர்கள். 2018 இல் ‘செழியன்’ இயக்கிய ‘டு லெட்’ எனும் குறும்படம் 65ஆவது தேசியத் திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்திற்கான ‘தேசிய விருதினையும்’, ‘கோவா’வில் நடைபெற்ற 49ஆவது ‘சர்வதேச திரைப்பட விழாவில்’ ‘சிறப்பு நடுவர் பரிந்துரை’ விருதினையும் பெற்றது. மற்றொருவரான ‘அய்யப்ப மாதவன்’ நவீன கவிதை வெளியில் 20 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக இயங்கி வருபவர். ‘பரதேசி’ திரைப்படத்திற்கான இந்திய அரசின் சிறந்த ஒளிப்பதிவாளர் விருதைப் பெற்றவர் செழியன் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவர்கள் இருவர் மட்டுமல்லாது பலரும் கூடும் இலக்கியக் குடிலாக விளங்கியது அன்னம் - அகரத்தின் சிறப்பு.

1975 இல் அன்னம்-அகரம் தொடங்கப்பட்டது வணிக நோக்கில் அல்ல; இலக்கியத் தரத்தையும் அழகியல் வடிவமைப்பையும் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்ட பதிப்பகம் இது. சிற்றிதழ் சார்ந்து இயங்கிவந்த படைப்பாளிகளுக்கு அன்றைய நாளில் நிழல் தரும் மரமாகத் திகழ்ந்தது இப்பதிப்பகம். தனது தொடர்ந்த பயணங்களாலும், படைப்பாளிகளுடனான சந்திப்புகளாலும் பதிப்பகத்தைச் செழுமையான வளர்ச்சிப் பாதையில் சிறகடிக்கச் செய்தவர் மீரா அவர்கள்.

மதுரையில் இயங்கிய அன்னம்-அகரம் புத்தக விற்பனை நிலையம் படைப்பாளிகள் கூடும் ஒரு நிழல் மரமாகவே ‘80 மற்றும் ‘90களில் செயல்பட்டது. அக்காலகட்டத்தில் அம்மரத்தடி நிழலில் கால் பதிக்காத படைப்பாளிகளோ கலைஞர்களோ இல்லை என்றே சொல்லலாம்.

தூண்டில்காரனின் கண்ணும், வேட்டைக்காரனின் பொறுமையும் கொண்டு வாழ்ந்தவர் மீரா அவர்கள். 1984 அக்டோபரில் மதுரை மாநகரில் கி.ரா மணிவிழாவை முன்னின்று நடத்தியவர் மீரா. கோவில்பட்டியில் அப்பொழுது இளம் படைப்பாளிகளாகத் திகழ்ந்த சமயவேல், தேவதச்சன், கௌரிசங்கர், மாரீஸ் ஆகியோர்கள் முதலில் இந்நிகழ்வை கோவில்பட்டியில் நிகழ்த்த நினைத்திருந்தார்கள். அது முடியாமல் போய் மதுரையில் அரங்கேறியது.

கி.ரா கண்ட பெரும் கனவுகளில் ஒன்று “வழக்குச் சொல்லகராதி” நூலைக் கொண்டுவருவது. கி.ரா வின் இக்கனவை 1982 இல் நனவாக்கியவர் மீரா. கடித இலக்கியத்திற்கு முதல் நூலாக்க வடிவம் கொடுத்தவரும் மீரா அவர்களே. 1989 இல் “கி.ரா கடிதங்கள்” எனும் நூலை அன்னம் வெளியிட்டு தனி இலக்கிய வகைமையில் தடம் பதித்தது அன்னம். ‘தேன் எடுத்தால் தேனாகவே இருக்க வேண்டும்; தேனாகவே இலக்கிய வாசகர்களுக்குக் கொடுக்க வேண்டும்’ என்பதையே தனது வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர் மீரா.

1987 இல் தொடங்கி ஐம்பது வாரங்கள் ஜூனியர் விகடனில் தொடராக வெளிவந்து வாசகர் வரவேற்பைப் பெற்ற தொடர் “கரிசல் காட்டுக் கடிதாசி”. மதிப்புமிக்க ஓவியக்கலைஞர் கே.எம். ஆதிமூலத்தின் ஓவிய மொழியும், கி.ரா வின் மக்கள் மொழியும் கலந்த இந்தத் தொடரினை 1988 இல் நூலாக்க வடிவம் கொடுத்துக் கொண் டாடியவர் மீரா.



*ஆரம்ப நாள்களில் திராவிட இயக்க ஆதரவாளராக இருந்தவர், பின்னர் அர்ப்பணிப்புள்ள மார்க்ஸியவாதியாக நகர்ந் தவர் மீரா. இலக்கியத்தை தன் அரசியல் – பண்பாட்டு நம்பிக்கைகளின் செயற் களமாக கண்டவர் அவர்.*

*சிவகங்கையில் தன் பூர்விக இல்லத்தில் சொந்தநிலத்தை விற்றுச் சேர்த்த செல்வத்தில் அவர் தொடங்கிய அன்னம் பதிப்பகமே எண்பதுகளில் நவீன தமிழிலக்கியத்தின் விளைநிலம். கி.ராஜநாராயணன் வண்ணதாசன், வண்ணநிலவன், கந்தர்வன், நாஞ்சில்நாடன், பூமணி, என நாம் இன்றுகொண்டாடும் அத்தனை படைப்பாளிகளையும் வெளியிட்டு உலகறியச்செய்தவர் மீரா. கோணங்கி, எஸ். ராமகிருஷ்ணன், இரா.முருகன், பவா செல்லத்துரை, சோ.தர்மன்,நான் உள்பட என் தலைமுறையின் அத்தனை படைப்பாளிகளும் எங்கள் கைப்பிரதிகளுடன் அவரையே நாடிச் செல்வோம். அவர்களின் முதல் நூல்களை அன்னம் பதிப்பகமே வெளியிட்டது.*

*பதிப்பக / அச்சக ஊழியர்கள் ஓர் இலட்சியத்துக்காகவே பணியாற்றினர். மீராவே இரவு பகலாக அமர்ந்து மெய்ப்புப் பார்ப்பார். கல்லூரி பயிலும் 1984-87 காலகட்டத்தில் நானும் பலமுறை மெய்ப்புப் பார்த்துள்ளேன்.*

*ஒப்புநோக்க மிக அரிதான பிழைகளுடன், மிகச்சிறந்த கட்டமைப்புடன், மிகக்குறைவான விலையில் சிறந்த அழகியல் தன்மையுடன் வெளியிடப்பட்டன அன்னம் / அகரம் நூல்கள். அதுதான் மீராவின் சாதனை என்பது. மீராவின் விழுமியங்களே உயர்தரப் பதிப்பாளனுக்குரியவை.*

*1982 இல் பாரதி நூற்றாண்டுவிழா வந்தபோது அதையொட்டி அன்னம் 100 கவிதைத்தொகுதிகளை வெளியிட முற்பட்டது. "அன்னம் நவகவிதை வரிசை" என்று அதற்குப்பெயர். அத்தனையும் புதியகவிஞர்களின் நூல்கள். இன்று கவிஞர்களாக அறியப்படும் அனைவரின் கவிதைகளும் முதல்முறையாக தொகுப்பாக அப்படித்தான் வெளியாயின. விக்ரமாதித்யன், கலாப்ரியா, வண்ணதாசன், வண்ணநிலவன் என எத்தனை பெயர்கள். அந்த தொகுதிகள்தான் எழுத்து தொடங்கிய புதுக்கவிதை மரபை ஆழமாக நிலைநிறுத்தின; அவை ஓர் இயக்கமாக புதுக்கவிதையை மாற்றின. மெய்யான இலக்கியச்சாதனை என்றால், இலக்கியப் பங்களிப்பு என்றால் அதுதான். பாரதி நூற்றாண்டு விழா அரங்கில் ஓடித்திரிந்த எனது பள்ளிப்பருவ நாள்கள் இப்பொழுதும் பசுமை நினைவுகளாக என்னுள் உள்ளன.*

*மீரா இளம்படைப்பாளிகளின் நூல்களைத் தேடித்தேடிப் பதிப்பித்தார்.*

*ஆண்டுதோறும் பாண்டிச்சேரி, திருவண்ணாமலை, மதுரை எனப் பல ஊர்களில் புத்தகக் கண்காட்சிகளை நடத்தினார் மீரா. அப்பொழுதெல்லாம் கதிருடன் நானும் பாபு, லோகுவும் இணைந்தே சுற்றி வந்தோம்.*

*மதுரையில் இருந்த அன்னம் புத்தகவிற்பனை நிலையம் எனக்கான இலக்கியத் தங்கும் விடுதியாகவே இருந்தது. கோணங்கி மற்றும் பல இலக்கியவாதிகளுடன் உரையாடியபடி பல நாள்களை அங்கு நான் கழித்துள்ளேன்.*

*இப்படித்தான் நவீனத்தமிழிலக்கியத்தை மீரா வளர்த்தார்.*

*கர்ணன் கவச குண்டலத்துடன் பிறந்தது போல் பிரீப்கேசுடன் பிறந்திருப்பாரோ என்று தான் மீராவுடன் பழகியவர்கள் நினைத்திருப்பார்கள். அப்படி ஒரு பிரீப்கேஸ் எனும் பயணப்பெட்டியுடன் காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு சுற்றி வந்தவர் மீரா.*

*சினிமா பயிற்சி முகாம் ஒன்றைச் சில நண்பர்களுடன் இணைந்து நடத்தினார் மீரா. பொதுவெளியில் பார்க்கக் கிடைக்காத அபூர்வப் படங்களை அந்த முகாம் சிவகங்கை ரசிகர்களுக்கு அடையாளம் காட்டியது.*

*அன்னம் பதிப்பகத்துக்கு முன் கிளை பரப்பி நின்ற முதிர்ந்த அரச மரத்தடியில் எத்தனையோ இரவுகள் கவியரங்களை நடத்தியுள்ளார் மீரா.*

*இப்பொழுதும் எப்பொழுதும் ஒரு பசுமையான இலக்கிய நினைவாக மீரா இம்மண்ணில் நிலைபெற்று வாழ்ந்திடுவார் என்று நம்புவோம். இதுவே மக்கள் அவருக்குக் கட்டியுள்ள மணிமகுடம் என்பதில் பெருமை கொள்வோம்.*

*கவித்துவத்தையும், இலக்கிய மேமையையையும் தனக்குள் கரைத்துக் கொண்டு பூரணத்துவமான வாழ்வு வாழ்ந்தவர் மீ.இராஜேந்திரன் எனும் மீரா, "உறங்கும் கடல்" என்று வர்ணிக்கப்பட்ட 'ஐராவதி' ஆற்றின் செழுமையும், அடர்த்தியும் கொண்ட பதிப்பகக் கடல் மீரா தன் வெளியீடுகளைப் பேசச் செய்துவிட்டு ஊனுடலுடன் உறங்குகிறார் என்பதே என் எண்ணமும் நம்பிக்கையும்.*

# மீரா:
# எழுத்தாளர்களின் கலங்கரை விளக்கம்

வளவ. துரையன்

கடலூர், தமிழ்நாடு

"கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்."

இந்தச் சொற்கள் மூன்றும் மட்டும் போதும் மீராவை அடையாளம் காட்ட. எண்பதுகளில் பல புதிய இளம் கவிஞர்களுக்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்தவர். அவர் வாழ்ந்த காலம் வரை சிவகங்கையும் கவிதையும் ஊனும் உயிருமாக இருந்தன.

அவர் குறைவான புத்தகங்கள்தாம் எழுதினார். ஆனால் அவை அனைத்தும் நிறைவானவை. அவை எல்லாம் இன்றைய கவிஞர்களுக்குக் கலங்கரை விளக்கங்கள். அவர் நடத்திய அகரம் அச்சகம், சிவகங்கையில் எப்போதும் வற்றாத கங்கை ஆறைப்போல ஓய்வில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும், பெரும்பாலும் தங்கள் படைப்புகளை நூலாக்க வசதியற்ற இளங்கவிஞர்களுக்காக அந்த அச்சகம் ஓடிக் கொண்டேயிருந்தது.

அவர் தொடங்கிய அன்னம் பதிப்பத்தையும் அவர் அவருக்காக நடத்தவில்லை.

பாரதி விட்டுச் சென்ற புதுக்கவிதைத் தேரை, பலரும் இழுத்தார்கள். ஆனால், அதை சிவகங்கைக் கருவைக்காட்டுக்குள்ளும், கண்மாய்க்குள்ளும் முடிந்த வரை இழுத்துக்கொண்டு வந்தவர் அவர்தாம்.. கவிஞர் மீரா.

இன்றைய வளர்ந்து வரும் கவிஞர்கள் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டியவர். அதற்குக் காரணம் எக்காலத்துக்கும் புரியக் கூடிய அவருடைய கவிதைகள், கட்டுரைகள்தாம்.




மீரா என்ற மீ. இராசேந்திரன், 1938 ஆம் ஆண்டு பர்மாவில் பிறந்த மீரா, சிவகங்கை சிவன் கோயில் தெற்குத் தெருவில் வளர்ந்தார். சிவகங்கைக் கல்லூரியில் படித்து அங்கேயே பேராசிரியராக, தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி முதல்வர் பொறுப்பு வரைக்கும் உயர்ந்து ஓய்வு பெற்றார்.

தொடக்கக் காலத்தில் திராவிட இயக்கக் கருத்துக்களால் கவரப்பட்ட அவர், பின் பொதுவுடமைக்காரராக மாறிப்போனார். சிவகங்கை மன்னர் துரைசிங்கம் கல்லூரியில் பேராசிரியர் பணியோடு கல்லூரிப்பணி, சமூகப்பணி, ஆசிரியர் இயக்கப் பணி இவைகளுடன் இலக்கியப் பணியையும் மிகவும் விரும்பிச் செய்தார்.

'இராசேந்திரன் கவிதைகள்', 'மூன்றும் ஆறும்', 'கோடையும் வசந்தமும்', 'ஊசிகள்', 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்', 'குக்கூ', 'வா இந்தப் பக்கம்', 'மீரா கட்டுரைகள்', 'பாரதியம்', 'சுயம்வரம்: போன்ற நூல்களை அவர் எழுதியுள்ளார்.

இதில் ஊசிகள், கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள் ஆகிய கவிதை நூல்கள் இலக்கிய வெளியில் மட்டுமல்ல, பொதுவெளியிலும் மிகப் பரவலாகப் பேசப்பட்டன. இளைஞர்கள் கொண்டாடும் நூல்களாக அந்தக் காலகட்டத்தில் இவை இருந்தன.




மாதம்தோறும் மீரா வீட்டு வாசலில் ‘கவி இரவு’ நடத்தினார். அதைக்கேட்க ஊர் மக்கள் வெட்டவெளியில் கூடுவர். தன் மண்ணின் மக்களை, இலக்கியச் செழுமையாக்க தம்மால் முடிந்தமட்டும் இதுபோன்ற இலக்கிய நிகழ்வுகளை நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் கவிஞர் மீரா.

கவிக்கோ அப்துல்ரகுமானும், சிற்பியும், முன்னாள் அமைச்சர் கா. காளிமுத்துவும், பேரா.நா.தர்மராஜனும் மீராவுக்கு மிகவும் நெருக்கமான நண்பர்கள். கல்லூரிப் பேராசிரியர் போராட்டங்களுக்காக, உரிமைகளுக்காக தீவிரமாகச் செயலாற்றிய, ‘முட்டா’ எனும் கல்லூரி ஆசிரியர் சங்கத்தை அன்று உருவாக்கியவர்களில் முக்கியமானவர் மீரா.

சமூக அவலங்களையும் அவர் தன் கவிதைகளில் சுட்டிக்காட்டத் தவறவில்லை. மீராவின் ‘ஊசிகள்’ நூல் அன்றைய தமிழகத்தின் அரசியல், சமூக வாழ்க்கையின் சிக்கல்களை எள்ளல் பாணியில் கூறியது.

எங்கள் ஊர் எம்.எல்.ஏ
ஏழு மாதத்தில்
எட்டுத் தடவை
கட்சி மாறினார்
மின்னல் வேகம்
என்ன வேகம் ?
இன்னும் எழுபது
கட்சி இருந்தால்
இன்னும் வேகம்
காட்டி இருப்பார்.....
என்ன தேசம்
இந்தத் தேசம் ?

இதை ஓர் எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

ஜப்பானிய ஹைக்கூ கவிதை வடிவத்தை மாற்றி ‘குக்கூ’ என்று புதிய வடிவில் எழுதினார். மோசமான அரசியல் பண்பாட்டை, சாதிப் பெருமிதத்தை, சமூக அவலங்களை எல்லாவற்றையும் அவர் கண்டித்தார்.

“செத்த பிணத்தைக்
கட்டி அழலாம்
முடிந்தால்
காட்டி அள்ளலாம்...”

இது போன்ற கவிதைகளில், மோசமான அரசியல் பண்பாட்டை விளக்கினார். படித்தவர்கள், முற்போக்காளர்கள் மத்தியிலும் சுயசாதிப் பெருமிதம் இருப்பதையும் தனது கவிதைகளில் எள்ளல் நடையில் கூறினார்.

உனக்கும் எனக்கும்
ஒரே ஊர் -

வாசுதேவ நல்லூர் ...
நீயும் நானும்
ஒரே மதம்...
திருநெல்வேலிச்
சைவப் பிள்ளைமார்
வகுப்பும் கூட,..
உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக்காரர்கள்...
மைத்துனன்மார்கள்
எனவே
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே

*(நூல்- ஊசிகள்)*

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத் தாக்கம், அறிஞர் அண்ணா தந்த தமிழ்மொழிக் காதல், மார்க்சின் பொதுவுடைமைச் சித்தாந்தங்கள் ஆகியவற்றை உள்வாங்கிக்கொண்ட கலவையாகத்தான் கவிஞர் மீரா திகழ்ந்தார். அதன் வெளிப்பாடாகவே அவருடைய கவிதைகளும், கட்டுரைகளும் இருந்தன.

'அன்னம் விடு தூது' என்ற சிற்றிதழையும் நடத்திக் கொண்டிருந்தார். அது ஒரு மாறுபட்ட இதழாக அப்போது வந்து கொண்டிருந்தது.

சிவகங்கைச் சீமைக்கு விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய வரலாற்றுப் பெருமை இருந்தாலும் அதன் இலக்கியப் பெருமை என்றால் கவிஞர் மீராதான்.

அவரது நினைவைப் போற்றுவதும், அவர் புகழைப் பரப்புவதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

# வளர்த்துவிட்ட வளரி !



ஆரையூர் தாமரை
ஜெர்மனி

அகவை பதினைந்தில்
முகமது மலர்ந்து
தரமதில் உயர்ந்து
வளர்ந்து நிற்கும்
வளரிக்கு வாழ்த்துகள்!

முகமதை மறைத்து
இலைதனில் ஒளிந்த
காயது போன்ற கவிகளுக்கு
களமது கொடுத்து
வளர்த்து விட்ட
வளரிக்கு வாழ்த்துகள்!

ஆல்போல் தழைத்து
அறுகுபோல் வேரூன்றி
மேலும் மென்மேலும்
வீறு கொண்டு வளரவே
வளரி இதழ் பல்லாண்டு!

# பெருந்தீ !



பெண்களுக்கென எழுப்பப்படும்
ஆண்களின் பிரத்தியேகக்
குரல்களின் வாயிலாக
தாய்மையின் மகத்துவம்
தழைத்தோங்குகிறதென்றால்
அக்குரல்
யுகாந்திர நம்பிக்கையின் அடையாளமென அறிக

வன்புணர்வதற்கென
நீளும் கைகளை
முறித்துப் போடுவதற்கென
ஒரு தடிக்கம்பு பறந்து செல்கிறது
ஆயுதமென்பது அநீதியை எதிர்க்கும் துணிச்சல்

வடிந்தவுடன் உறைந்துவிடும் இரத்தங்களில்
சாதிகளின் பெயரால்
கணக்கிலடங்கா கொடுமைகளைச் சாடிவிட்டு
கெக்கலிட்டுச் சிரிக்கும் தொண்டைகளின் மீதும்
அத்தடி பாய்ந்துத் தாக்கியது

எல்லோருக்குமான சுயமரியாதையின்
அளவுகோல்
ஒன்றேதானென்று ஆகுகையில்
சிலர் ஏவிப்பிழைக்க
என்ன அவசியமென
பகுத்தறிவுக் கேள்விகளால்
ஆதிக்க வர்க்கத்தை
நடுங்கவைத்தக் கிழவரவர்

கண்ணே மணியே கருவே உயிரேவென
இளங்குருத்துகளைப் பாடித் திரிந்து
மலரும் முன்னமே மணம் செய்து வைக்கும்
ஈனச் சடங்குகளின் மீதும்
தடியதிகாரம் விட்டு வைக்கவில்லை

அரசியலின் மீது அரசியல் செய்தோரை
அறங்கூற்று பிழைக்கென
வெங்காயம் வெங்காயம்
வெங்காயமென
ஒற்றைச்சொல்லும் தடிக்கம்பும்
வாழ்நாள் பாடமாக ஓதிச் சென்றார்

அத்தனை நாடுகளும் வியந்து நோக்கும்
தனியொரு மனிதர் ஏற்றி வைத்தப் பெருந்தீ
கொழுந்து விட்டெரிந்து
அநீதிகளுக்கெதிராக இன்னமும்
அச்சுறுத்துகிறதெனில்

அவர் யார் எனக் கேட்போரிடம்
நெஞ்சுரத்து உரைப்பாய்
பெரியார் என




பாலைவன லாந்தர்
தமிழ்நாடு

# தவம்

*நல்விதைகளை வீசிடுங்கள்*
*திசைகள்தோறும் சிதறட்டும்*
*வீழுமிடம் பாலைவனமாகலாம்*
*இல்லை*
*பசுமையான நிலமாகலாம்*

*கவலை வேண்டாம்*
*கடந்து செல்லுங்கள்*
*கார்மேகம் சூழ்ந்த*
*வான்பரப்பின்*
*இடைவெளிக்குள்*
*ஆதவன் ஆயிரம் கரம் நீட்டி*
*ஒளி கொடுக்கும்*

*விடியலில் வீழ்ந்த விதைகள்*
*செடியாகி மலராகி பின்*
*கனியாகிச் சுவைக்கும் காலம்*
*கண்முன்னே கனிந்து வரும்*
*அன்று*
*பரிசாகப் பெறுவீர்கள்*
*பாரின் கொடையை*

*வீணென்று விரக்தியுற்ற*
*ஏக்கத்தின் தாக்கம்*
*பூஞ்சோலைக்குள் புகுந்த*
*வண்டுகள் பெற்ற*
*தேனாமிர்தத்தின்*
*அருஞ்சுவையை நீங்களும்*
*ருசித்துச் சுவைக்கும்*
*நாள்கள் நயமோடு வரும்*
*ஆனந்தக் களிப்போடு*
*உளம் மகிழும் விருந்தை*
*இப் பிரபஞ்சம் உங்களுக்கு*
*வாரி வாரி வழங்கும்*

*இன்று போட்ட விதை*
*அன்றே அறுவடையாவதில்லை*
*காத்திருப்பு ஓர் தவம்*
*தவத்தின் வரமே வெற்றிக்கனி..!*






கலைமகள்

இலண்டன்

# மீரா கண்ட கனவு: தமிழர்களின் சோவியத் தமிழீழம்

அருணாசுந்தரராசன்


செப்டம்பர்

தமிழர் வரலாற்றிலும் தமிழக வரலாற்றிலும் முக்கிய நிகழ்வுகளைத் தந்து தமிழர் வாழ்வோடு இரண்டறக் கலந்த மாதமாகத் திகழ்கிறது.

தொலைந்து போன தன்மான முகவரியைத் தமிழர்களுக்கு மீட்டுத் தந்த தமிழர் தலைவர் தந்தை பெரியார் பிறந்ததால் பெருமை பெற்ற மாதமாகிறது செப்டம்பர்.

தனித்துவமான, கவித்துவமான பேச்சாற்றலால் அரசியல், இலக்கியத் துறைகளை மட்டும் அல்லாமல் அமெரிக்க யேல் பல்கலைக்கழகத்தையே திரும்பிப் பார்க்கச் செய்த அண்ணா பிறந்ததும் செப்டம்பர் தான்.

தமிழர் அரசியல் வாழ்வில் புதிய மாற்றத்திற்கு வித்திட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட மாதமும் செப்டம்பர் தான்.



மகாகவி பாரதி நினைவுகளை நம் நெஞ்சங்கள் தேக்கி வைத்திருப்பதும் செப்டம்பர் தான்.

இறுதி மூச்சு வரை பெரியாரின் கொள்கைகளை நாடகம் மற்றும் திரைப்படங்கள் வாயிலாக மக்கள் மத்தியில் பரப்பிய நடிகவேள் எம் ஆர் இராதா மறைந்ததும் இதே செப்டம்பரில் தான்.

தமிழை, பெரியாரின் பகுத்தறிவை, சமூக அவலங்களை, காதலை தனது கவிதை வரிகளில் ஓயாது எழுதித் தீர்த்த எங்கள்‘ கவிப்பேரொசான் ’ மீராவைப் பறித்துச் சென்றதும் செப்டம்பர் தான்.

இப்படி எத்தனையோ வரலாற்று நிகழ்வுகளைத் தாங்கி நிற்கிறது செப்டம்பர் மாதம்.

வேலு நாச்சியார், மருது சகோதரர்கள் வரிசையில் சிவகங்கை மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர் எங்கள் மீரா. அவர் ஓர் கவிதை ஆலமரம். அவரின் நிழலில் நூற்றுக்கணக்கான இளம் கவிஞர்கள் புதிது புதிதாய்ப் பிறந்தார்கள்.

இங்கிலாந்து நாட்டின் பெங்குவின்- பெலிகான் போல் தமிழ்நாட்டில் பெயர் சொல்ல ஒரு பதிப்பகம் வேண்டும் என்கிற அவரது தணியாத தாகத்தின் வெளிப்பாடு தான் அன்னம் அகரம்.

அன்னமும் அகரமும் மீராவின் பெயர் சொல்லும் தமிழ் இலக்கியம் வாழும் வரை.

மீரா என்னும் மாமனிதர் என்னையும் அறிந்து நேசித்து ஏறக்குறைய 22 ஆண்டுகள் ஆகின்றன. எண்பதுகளில் நான் கேரளாவில் பணி புரிந்து கொண்டிருந்த சமயம் அன்னம் விடு தூது வெளிவந்து கொண்டிருந்தது. மலையாள கவி உலகில் பிரபல பெண் கவிஞர் மாதவி குட்டியின் கவிதை ஒன்றினை மொழி பெயர்த்து அனுப்பியிருந்தேன். மொழிபெயர்ப்பின் இறுதிப் பகுதி திருப்தியாக இல்லை அதைத் திருத்திய அனுப்பி வையுங்கள் என்று கடிதம் எழுதியிருந்தார் மீரா. அவரே அந்தப் பகுதியைத் திருத்தி கவிதையை வெளியிட்டு இருக்கலாம். ஆனாலும் மொழிபெயர்ப்பின் சூட்சுமங்களை ஒரு மொழிபெயர்ப்பாளர் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது எனக்கு உணர்த்தவே அவர் அப்படிச் செய்திருப்பார் என எண்ணுகிறேன். இரண்டு மூன்று தடவைகள் எழுதி அனுப்பியும் மீண்டும் மீண்டும் அவர் திருத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தார். பிறகு ஒருவழியாக அவர் திருப்தி அடைந்து அன்னமிடு தூது இதழில் அந்த கவிதை வெளியானது.

அரசியல் புலனாய்வுக்கான 'தராசு' இதழின் ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டச் செய்தியாளராக நான் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம். அடிக்கடி, ஏன் ஒவ்வொரு நாளும் மீராவைச் சந்திக்கின்ற பேறு பெற்றிருந்தேன். திராவிட அரசியலின் கொள்கைத் தடுமாற்றம், புலனாய்வுப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளின் நம்பகத்தன்மை, விடுதலைப்புலிகளின் வீரியமிக்க போராட்டம், தமிழீழ மக்களின் எழுச்சி இவை பற்றியெல்லாம் மீரா என்னோடு உரையாடி இருக்கிறார். விடுதலைப் புலிகள் ஏதேனும் தாக்குதல் நடத்தி இலங்கை இராணுவத்திற்குப் பலத்த இழப்பு ஏற்பட்டிருந்து, நான் ஓரிரு நாள்கள் கழித்து அவரைச் சந்திக்கும்போது "என்ன சுந்தர்ராஜன், வராம போயிட்டீங்களே. புலிகளின் பாய்ச்சலைப் பார்த்தீர்களா" என்று விடுதலைப்புலிகளின் வெற்றிச் செய்தியைப் பெரும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்வார். அந்தக் காலகட்டத்தில் ஈழப் போராட்டத்திற்கு நிறைய உதவிகள் செய்தவர் மீரா.

தமிழீழம் தமிழர்களின் சோவியத்தாக அமைய வேண்டும் என்பது அவரது பேரவாவாக இருந்தது. அதைப் பலமுறை என்னிடம் கூறியிருக்கிறார்.

என்னுடைய முதல் கவிதைத் தொகுப்பான 'அந்நிய முகங்கள்' வெளியிட்டு விழா 1985இல் மானாமதுரையில் நடைபெற்றது. தலைவர் பழ. நெடுமாறன் வெளியிட, முதற் பிரதியை மீரா பெற்றுக் கொண்டார். இதில் கலந்து கொள்வதற்காகவே மீரா அவர்கள் அவசர அவசரமாக சென்னையிலிருந்து வந்திருந்தார். முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு அன்று அவர் நிகழ்த்திய உரை எனக்கு நல்லதொரு அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது.

ஐயா நா. அருணாசலம் தலைமையிலான 'தமிழ்ச் சான்றோர் பேரவை' ஆண்டுதோறும் 'தமிழகப் பெருவிழா' நடத்தி தகைசால் தமிழர் ஒருவருக்குத் 'தமிழ்ச் சான்றோர்' விருது வழங்கிச் சிறப்பித்து வந்தது. 2000 ஆம் ஆண்டுக்கான விருதுக்கு மீரா தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவர் உடல் நலம் குன்றியிருந்த காலகட்டம் அது. அவரின் ஒப்புதலைப் பெறவும் திருநெல்வேலிக்கு அவரை அழைத்துச் செல்வது தொடர்பான பயண ஏற்பாடுகள் பற்றிப் பேசவும் தமிழர் தேசிய இயக்கப் பொதுச்செயலாளர் பரந்தாமனுடன் நானும் மற்றும் சிலரும் சிவகங்கை சென்றிருந்தோம். அகரம் அச்சகத்தின் வெளிப்புறச் சுவரை ஒட்டிச் செல்லும் படிக்கட்டுகள்,. கவிப்பேராசான் மீராவைச் சந்திக்க அடிக்கடி குதூகலத்தோடு ஏறி இறங்கிய அந்தப் படிக்கட்டுகளில் பழைய நினைவுகளை அசைபோட்டபடி கனத்த இதயத்தோடு ஏறிக் கொண்டிருந்தேன்.



*மின்னல் வெட்டு போல திடீரென மின்வெட்டு. மனமெங்கும் சோக இருள் அப்பியிருக்க கவிப்பேரொசானைக் காண வரவேற்புரைக்குள் நுழைந்தோம். "எல்லோரும் வாங்க..." என்று வரவேற்ற அண்ணியார் கதவின் ஓரம் ஒதுங்கிக் கொண்டார். வழக்கமான சிரிப்பு மட்டும் காணாமல் போயிருந்தது அவரிடம். கம்பீரமான உருவமும் எவரையும் சுண்டி இழுக்கும் அந்தக் குளிர் புன்னகையும் மறைந்து எப்படியோ இருந்தார் மீரா. அந்தக் கோலத்தில் அவரைக் காணப் பொறுக்கவில்லை. ஒரே ஒரு மெழுகுவர்த்தி மட்டும் அந்த அறைக்குள் இருளை விலக்கி வெளிச்சம் பரப்ப முயன்று கொண்டிருந்தது.*

*நூல் வெளியீட்டில் பற்பல புதுமைகள் மூலம் பெரும் சாதனைகள் படைத்த எங்கள் மீராவும் இந்த மெழுகுவர்த்தியைப் போலவே தன் தேகத்தை நோய் உருக்கியபோதும் பதிப்புத் துறையில் தமிழின் உயர்வுக்காக உருகிக் கரைந்தவர் தானே?*

*தமிழ்ச் சான்றோர் பேரவை விருது பற்றிப் பரந்தாமன் எடுத்துக் கூறி விழாவுக்கு வரும்படி அழைத்தார். "ரொம்ப சோர்ந்து போயிட்டேன். அவ்வளவு தூரம் பயணம் செய்ய முடியுமான்னு தெரியலையே..." என்றார் மீரா. "இப்ப அவங்க எங்கேயும் போறதில்லை..." இது அண்ணியார். உடல் நலம், பயணச் சிரமம் இரண்டையும் பொருட்படுத்தாமல் தமிழின் மேல் கொண்டிருந்த மாறாத பற்றின் காரணமாக வர ஒப்புக்கொண்டார். மகிழுந்து ஏற்பாடு செய்வதாகக் கூறினார் பரந்தாமன். சரி என்று தலையாட்டியபடி இருளை ஊடுருவியவர், " சுந்தர்ராஜன் எப்படி இருக்கிறார்? " என்று கேட்டார். ஒரு கணம் நிலைகுலைந்து போனேன். அவரும் வந்திருக்கிறார் என பரந்தாமன் கூறினார். நான் அவர் அருகில் சென்று, "ஐயா வந்திருக்கிறேன்" என்றேன்.*

*"சுந்தர்ராஜன் எப்படி இருக்கீங்க? "மெல்லிய குரலில் கேட்டார். பெரும் புயலுக்குப் பின் சிதைந்து போய்க் கலைந்து கிடக்கும் பெருநகரம் போல் தெறித்துத் தெறித்து வெளிவந்தது அவர் குரல்.*

*"நல்லா இருக்கேன் ஐயா. மீண்டும் உங்களைப் பழைய நிலையில் காண்போம்" என்று கூறினேன். ஏறிட்டுப் பார்த்துப் புன்னகைத்தார். அவரிடமிருந்து விடை பெற்றோம். இந்த நிலையிலும் மறக்காமல் உங்களைக் கேட்கிறாரே என்று உடன் வந்த நண்பர்கள் நெகிழ்ந்து போனார்கள். நானும் தான். இமை வேர்களைக் கண்ணீர் நனைத்திருந்தது.*

*மீராவின் கைபிடித்து அவர் போட்டுத் தந்த புதுக்கவிதைப் பாதையில் நடந்து கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். தந்தை பெரியாரைப் பார்த்து, அறிந்து அவரது பகுத்தறிவு முழக்கங்களைக் கேட்டு, தன்மான உணர்வு பெற்று, பொய்க் கடவுளையும், மூட நம்பிக்கைக் கதைகளையும் புறமந்தள்ளி சுயமரியாதை மனிதனாய் மாறிய எங்களுக்குப் பெரியார் வாழ்ந்த காலத்தில் அவரோடு வாழ்ந்தோம் என்கிற கர்வம் அதிகம் இருக்கிறது.*

*அதுபோல மீரா என்கிற புதுக்கவிதை வானம்பாடி பாடிப் பறந்த காலத்தில் அதன் சிறகுகளின் அணைப்பில் நாமும் கவிதை புனைந்திருந்தோம் என்கிற இலக்கியத்திமிர் இயல்பாகவே என்னைப் பற்றிக் கொள்கிறது.*

*('கவிப்பேராசான் மீராவைப் பிரிந்த 2002இல் 'புதிய திசை'களில் எழுதியது)*

# ஒரு சாலையின் புலம்பல்



*நீளமான பாதையில்*
*கூனிக் குறுகி*
*வீழ்ந்து கிடக்கிறேன்*
*கனரக வாகனங்கள்*
*உருண்டு சென்ற வலி*
*எழ எத்தனிக்கிறேன்*
*இயலவில்லை*

*நிழல் தந்த மரங்களை வெட்டியெறிந்த*
*வேதனையில் உழல்கிறேன்*
*வியர்த்து நிற்கிறேன்*

*அரிதாரம் பூசிய அரிவையர்*
*அலுவலகம் செல்வோர்*
*இருசக்கர வாகனத்தில்*
*இறக்கை கட்டிப் பறக்கிறார்*
*நான் எழவே நினைக்கிறேன்*
*என்னால் இயலவில்லை*

*கடிகார முள்களைவிட*
*வேகம் காட்டுகின்ற*
*சரக்குந்துகள் பேருந்துகளின்*
*இரைச்சலால் செவிடாகும் காதுகளை*
*மூடிக்கொள்ள நினைக்கிறேன் முடியவில்லை*

*சுற்றுச்சூழல் மாசு*
*சரி செய்ய எண்ணுகிறேன்*
*எழவே முடியவில்லை என்னால்*

*என்று என் காயங்கள் ஆறும்*
*என்று புலம்பல்கள் தீரும்?*



சு. ரெசினா பானு
பரமக்குடி, தமிழ்நாடு

## மீரா:
# கவிதை எல்லைகளும் தொட முடியாத உயர்ந்த மனிதர்!

## மூதுரை வரியாக மீரா:

*கவிஞர் மீ. இராசேந்திரனின் சாதனைகள் என எதனைச் சொல்லலாம்? எத்தனையைச் சொல்ல இயலும்? ஒன்னொன்னா நூறா, ஒருமிக்க நூறா என்ற மூதுரைதான் பதில். முற்றத்தில் தட்டாங்கல் ஆடும் கரங்கள்போல, தூக்கிப் போட்டு கைநிறையப் பிடிக்கலாம்.*

*தமிழ்மொழி, பண்பாடு, தமிழ்மக்கள் நலம் காக்கும் கலைக்கூடங்களாய் அன்றைக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி, மதுரைத் தியாகராசர் கல்லூரி, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் திகழ்ந்த காலம்; 1950கள், அறுபதுகள் என வரையறுக்க முடியும். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் நான் புகுமுக வகுப்பில் 1960ல் சேருகிற போது, மீ.இராசேந்திரன், அப்துல் ரகுமான், தி.கு நடராசன், ஆல் அச்சகம் பாலசுந்தரம் என ஒரு கவிஞர் கூட்டம் முதுகலைத் தமிழில் அணிவகுத்திருந்தது.*

*இராசேந்திர சோழன் போல தமிழினத்தின் முந்தைய வீரர்களைக் கொண்டாடுகிற பழக்கம் அன்று தமிழ் மாணவர்களிடை உருவாகி ஒருங்கிணைத்தது. தமிழின உணர்வாளர்களாய் ஒன்றாகினர்.*

*ஓர் அறையில் கவியரங்கம், உரை அரங்கம் என இராசேந்திர சோழனின் பிறந்தநாள் கொண்டாடினார்கள் முதுகலைத் தமிழ் மாணவர்கள். அரங்கில் மீ. இராசேந்திரனைச் சந்திக்கும் முதல் சந்திப்பு அது. அவருடனான தொடர் சந்திப்பும் உரையாடலும் ஒரு ‘யுக சந்தியாய்’ என்னுள் வினைபுரியத் தொடங்கிற்று. முதுகலை முடித்து அவர் சிவகங்கை மன்னர் கல்லூரியில் பயிற்றுநர்; அதன் பின்னர் விரிவுரையாளர். அன்றைய ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழ் தமிழ்நாட்டுக் கல்லூரிகள் மொத்தமும் இயங்கின. நான் முதுகலை முடித்த 1967-லிருந்து தென்மாவட்டங்களின் கல்லூரிகள், புதிதாய்த் தோற்றுவிக்கபெற்ற மதுரைக்காமராசர் பல்கலையின் கீழ் கொண்டுவரப்பட்டன.*

## நின்றுநிலைத்த மீரா:



*ஒரு வீறார்ந்த மரபின் தொடர்ச்சியாக தன் பெயர் உச்சரிக்கப்பட வேண்டும் என மீ. இராசேந்திரன் விரும்பினார். ‘அவர் தொகுத்துப் பதிப்பித்து 1962 இல் வெளிவந்த ’சுவை’ தொகுப்பு மீ. இராசேந்திரன் என்றே தலைப்பிடப்பட்டிருக்கும். அதை அவர் விரும்பினார். பெண்ணின் பண்புப் பெயராக தன்பெயர் சுட்டப்படுதலை அவர் விரும்பவில்லை. அதனால் அவரை ஆண் பெருமித உணர்வு கொண்டவராக மதிப்பிடல் அர்த்தமற்றது. அவர் எக்காலத்தும் ஆண் பெருமிதம் கொண்டவராகத் தன்னைக் காட்டிக்கொண்டதில்லை.*

*1966- 67 களில் என்னுடன் முதுகலையில் பயின்ற பேராசிரியர் மா. பெ. சீனிவாசன் “ராசேந்திரன் கவிதைகள்” என்னும் தலைப்பிலேயே முதல் தொகுப்பினை வடிவமைத்தார். பின்னர் மீரா என்னும் சுட்டு தவிர்க்க முடியாமல் பிற்காலத்தில் நின்றுநிலைத்துப் போயிற்று.*

பா. செயப்பிரகாசம்

ஊசிகள், கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள் போல நவீன கவிதை வடிவப் படைப்புகளுக்குள் காலடி வைக்கிறபோது, ஏலவே தாங்கிய மண் அத்துப் போயிற்று.

வாழ்காலத்தில் நிகழ்ந்தவைகளைப் பதிவு செய்தல் அவரது இயல்பு. 1961 இல் தியாகராசர் கல்லூரி திருவள்ளுவர் விடுதி முதல் தளத்தைக் கபளீகரம் செய்யும் அளவுக்கு வைகை ஆறு வெள்ளப் பெருக்கெடுத்தது. முதல் தளம் மட்டும்தான், பொட்டியாருக்கு அதுக்குமேல் விறைப்பு கொள்ளவில்லை.

"நிர்வாண மாய்க்கிடந்தாய் வையை! - இன்று
நீர்ச்சேலை அணிந்துள்ளாய்; நன்றுன் செய்கை!
வருமான மில்லாமல் நின்றாய் - இன்று
வள்ளல் போல் வாரிவழங்குகின்றாய்.
புதுவெள்ளப் பெருக்குக்கு நன்றி - உன்னால்
புதுஇன்பம் காணுகின்றேன் கவலை யின்றி
மதுஉள்ளம் கவின்காணும் நேரம்- என்றன்
மனமுறும் பாட்டாறும் உனையே சேரும்"

மரபுக் கவிதையில் தான் இராசேந்திரன் தொடங்கினார்; சுதந்திரமான வரிகளில் அமைந்த புதுக்கவிதையில் மீரா தோன்றினார்.

## 'மீரா படைப்பாளிகளின் தாய்'

யதார்த்தைப் பதிவுசெய்தல் அவரது இயல்பு. அவருடைய செயல்கள் புயல்வேகம் கொண்டவை. அவரது கவிதைகளும் வேக ஓட்டம் கொண்டவை.

'வேலை இருக்கிறது நிரம்ப - என்னை
வேகப்படுத்தி விடு தாயே'

என்ற வரிகள் திராவிட நாடு விடுதலை நோக்கியவையாய் முன்வைக்கப்பட்ட போதும், அது அவருடைய போர்க் குணமாக தளும்பிநின்றது. வெளிப்பட்டது. ஒரு படைப்புக் கலைஞன்,தன் பண்பியல்புகளைத் தனது படைப்புக்குள் இறக்கி வைப்பதிலிருந்து தப்பிவிட முடியாது என்பதற்கு உதாரணமாய் விளங்கினார். எழுத்தின் ஒவ்வொரு துளியிலும் அவனது பண்பின் மரபணு ஊர்ந்து செல்லும். ஒரு படைப்பாளி தானொன்றாகவும் படைப்பொன்றாகவும் இருக்க முடியுமானால், அவன் போலி. இத்தகையவர்கள் பொய் மலர்வது போல் மலர்ந்து, பிறகு இல்லாமலும் மறைவார்கள்.

வேக வேகமாய்க் காரியம் செய்தார். நோயில் முடக்கப்படும் கடைசிவரை இக்குணவாகு மாறவில்லை அதே வேகம் கவிதைகளாய் சந்தத் துள்ளல், ஈர்க்கும் அளவு குறைவுபடாது உற்பத்தியாகின.

'சாகாத வானம் நாம், வாழ்வைப் பாடும்
சங்கீதப் பறவை நாம்
பெருமை வற்றிப்போகாத நெடுங்கடல் நாம்
நிமிர்ந்து நிற்கும் பொதியம் நாம்,இமயம் நாம்:
காலத்தீயில் வேகாத,பொசுங்காத தத்துவம் நாம்
வெங்கதிர் நாம்,திங்கள் நாம்,அறிவை மாய்க்கும்
ஆகாத பழமையினை அகற்றிப் பாயும்
அழியாத காவிரி நாம், கங்கையும் நாம்'

என தமிழின எழுச்சிக் கவிதையில் மட்டுமல்ல, வெஞ்சினம் முதல் துயரம்,சாந்தம், அழுகை, காதல் என அனைத்து உணர்வுகளிலும் பொங்கி அடித்தது.

‘ இருந்தாலும் இது கொடுமை! கொடுமை! சாவே!’

என்று சிவகங்கைக் கல்லூரித் தாளாளர் மன்னர் துரைசிங்கம் மறைந்தபோது கொட்டிய கண்ணீர் வரிகள்- ஓட்டமும் துள்ளலும் சந்தமும், செழித்துக் குவிந்த கவிதைகள் - கல்லூரிக் காலத்தில் எங்கள் நாவுகளில் பாவேந்தர் கவிதைகளுக்கு அடுத்தபடியாக அவை நடமாடின.

பதிப்புத் துறையில் ஆரவாரமின்றி, சத்தமில்லாமல், மீசை முறுக்காமல் சாதனை செய்தார். அச்சு ஊடகத்துக்குள் அவர் நுழைந்தபோது, ஆண்டுச்சந்தா அடிப்படையில் மூன்று நூல்கள் என்ற நூதன திட்டத்தினை அறிவித்தார். பத்திரிகைகளுக்குச் சந்தா என்றுதான் அதுவரை வாசகர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். இது அவர்கள் அறியாதது. முதலாண்டு ஐநூறு சந்தாக்கள். அடுத்த ஆண்டில் நூற்றம்பதாகச் சரிந்து போனது. முதல் முயற்சியே ஆளைக் கவிழ்த்துவிட்டது. பின்னாளில் அவருடைய படைப்புத் திறனை உறிஞ்சிகொண்டே அவருடைய பதிப்புத்திறன் உத்தரவாதமுள்ள விமானமாய் உறுதியாய்ப் புறப்பட்டுப் பறந்தது. அந்த விமானத்துக்குள் படைப்பாளிகள் எல்லோருக்கும் இருக்கைகள்: உவகை பொங்கும் பயணிகளாய் படைப்பாளிகள். ‘மீரா படைப்பாளிகளின் தாய்’ என்றார் இன்குலாப்.

இதே வேலையாய் அலைந்தார். வியாபார அலைச்சலன்று. புதியது சாதிக்கும் அலைச்சல். எனது மூன்றாவது சிறுகதைத்தொகுதி.‘இரவுகள் உடையும்’ அட்டைக்கு சென்னையிலுள்ள ‘கிரியாவில்’ அப்போதே (1976)ஆயிரம் ரூபாய் கொடுத்து ஓவியம் வாங்கினார். உடன் நானும் சென்றிருந்தேன்.


கண்ட கண்ட இடங்களில் சாப்பாடு, கண் மண் தெரியாத அலைச்சல், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஏதாவது ஓர் ஊரில் ஏதாவது ஒரு கடையில் முடிவெட்டல், முப்பது ஆண்டுகள் முன் ஒரே இடமாய் முடிவெட்டிய, இப்போது செத்துச் சுண்ணாம்பாகிப் போன முத்துவின் முகம் அவருக்கு ஞாபகம் வருகிறது.

‘கல்லூரிப் பணி, தமிழ்த்துறைத் தலைமைப் பணி, முதல்வர் பொறுப்புப் பணி, கல்லூரிப் போராட்டப் பணி, கல்லூரி ஆசிரியர்கள்,தொழிற்சங்கப் பணி,’கவி இதழ்ப் பணி, அன்னம் விடுதூது இதழ்ப்பணி அன்னம் பதிப்பகப் பணி, சிறப்பாசிரியர் பணி, அகரம் அச்சு மேற்பார்வையாளர் பணி, கொஞ்சம் குடும்பப் பணி அவை எல்லாம் சேர்ந்து என் எழுத்துப் பணியை வளைத்துப் பிடித்துக் கட்டிப்போட்டுவிட்டன’

(மீரா முன்னுரை - பக் .23)

## பல திசைப் பயணி:

பதிப்புத்துறை என்ற ஒரு திசை அலைச்சல் மட்டுமல்லாது - இது பல திசை அலைச்சல், திகடுமுகடான அலைச்சல் அவருக்குள்ளிலிருந்த கவிஞனைத் தின்று தீர்த்தது. கடைசியாய் அவரையும் தின்றுவிட்டது.



“இடையில் ஒருநாள் கோவையிலிருந்த எனக்கு என் பையன் கதிரிடமிருந்து தொலைபேசி வந்தது - தோழர் பேராசிரியர் கோ.கேசவன் மறைந்துவிட்டார் எனச் செய்தி. உடனே கோவை விசயா பதிப்பகம் சகோதரர் மு.வேலாயுதம் அவர்களிடம் தகவலைப் பலகையில் எழுதி வையுங்கள் என்று சொல்லிவிட்டு மதுரை புறப்பட்டேன்.

மதுரை வரும்போது மணி பத்து. அதற்குள் அவர் உடலை மாயானத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டனர். அவருடைய துணைவியாரிடம் துக்கம்

விசாரித்துவிட்டு இரவு சிவகங்கை வந்து படுத்தது படுத்ததுதான். மறுநாள் காலை ஒன்பது மணி ஆகியும்  எழுந்திருக்க முடியவில்லை. உடம்பு ஒரு நிலையில் இல்லை. அசைய முடியவில்லை. கொஞ்சம் வலித்தது.

வந்தது முதல் வைத்தியம்தான். மதுரையில் மூன்று மருத்துவமனைகளிலும் கோவையில் கொங்கு மருத்துவமனையிலும் இருந்து பார்த்தேன். கடைசியில் 'பார்த்திசன்' என்னும் ஒருவகை வாதம் என்று கண்டுபிடித்தார்கள். சாப்பிடுவது, குளிப்பதுகூட முடியவில்லை. என் மனைவிதான் எல்லாம் செய்யவேண்டும். உடல்நிலை மோசமாகிவிட்டது.

பாரியின் பறம்பை மூவேந்தர்கள் முற்றுகையிட்டதுபோல் நான்கு ஆண்டுகளுக்கும் மேலான நீரழிவு. இதயநோய், வாதநோய் ஆகிய முந்நோய்களால் தாக்கப்பட்டு படுக்கையில் கிடக்கிறேன்"

## சுயமரியாதையும் பகுத்தறிவும்'

சுயமரியாதை, பகுத்தறிவு என திராவிட இயக்க குணங்களோடு உதித்த தி.மு.கழகத்தில் கவிஞர் மீராவின் பயணம் தொடங்கியது. சுயமரியாதை, பகுத்தறிவு, இந்தி எதிர்ப்பு, தனித்திராவிட நாடு, தமிழ் மறுமலர்ச்சி, சாதி ஒழிப்பு, கடவுள் மறுப்பு, சமூகச் சீர்திருத்தம், சமத்துவ சமுதாயம், கலப்புத்திருமணம் முதலியன கவிஞர் மீராவின் பாடுபொருள்களாகின. இறுதிவரை மீரா சரியானவற்றில் உறுதிபாட்டோடு இருந்தார்.  அவர் தன் மூன்று பிள்ளைகளுக்கும் சாதி மட்டுமன்று,மதமும் மொழியும் கடந்து திருமணம் செய்து வைத்தார்.

"என்னை போல் என் பிள்ளைகள் இருப்பர்களா என்பது சந்தேகம். என் கருத்துகளில் நூற்றுக்கு நூறு அவர்களுக்கு உடன்பாடு கிடையாது. நான் அவர்களின் உரிமைகளில் தலையிடுவது கிடையாது. "

மொத்ததில் ஒரு சீர்திருத்தவாதியாக - முற்போக்குச் சிந்தனையாளராக - மனிதபிமானியாக அவரை வளர்த்த திராவிட இயக்கம் வழிதவறியபோதும், அவர் வழி தவறாமல் நடந்தார்.

முந்நோய்களால் தாக்கப்பட்டு, நனைந்து பிழிந்து துணிபோல் மூலையில் கிடக்கிறபோது 'இப்போதாவது கடவுளைக் கும்பிடுங்கள். ஓம் நமசிவாயா சொல்லுங்கள், சுலோகம் சொல்லுங்கள்  என்று நெய்வேலியிலிருந்து  என் அருமை மகள் செல்மா சொல்லிப் பார்த்தும் நடக்கவில்லை: என்னால் முடியவில்லை' என்று மீரா எழுதுகிறார்.

அந்தத் தந்தை இப்படி நினைத்திருக்கலாம், பிள்ளைகளின் உரிமைகளில்  தான் எப்படித் தலையிடுவது இல்லையோ, அதுபோல் தன் கருத்துகளில் தலையிடப் பிள்ளைகளுக்கும் உரிமை கிடையாது. அவர்களுக்குத் தெய்வத்தில், கோயிலில், சுலோகத்தில் நம்பிக்கை. அவருக்கு மனிதத்தில் நம்பிக்கை: மனிதனை நம்பினார். எதில் அவர்களுக்கு ஈடுபாடும் பிடிப்பும் உண்டோ, அதில் அவருக்கு ஒன்றும் இல்லை என்பது  உண்மை.

## கருத்தியல் துடிப்பு :

1998 இறுதியில் அவர் உடல்நலம் குன்றினார் முடக்குவாதத்தில் ஒருவகையான 'பார்த்தின் - சன்' நோய் தாக்கி உடல் இயங்காமல் போய்விட்ட மூன்று கொடிய ஆண்டுகளில் அந்த நேரத்தில்கூட அவருடைய கருத்தியல் துடிப்பு வேகம் கொண்டு இயங்கியது. மானுட அறத்தின் ஆவேசத்துடன் தனது இருப்பை உணர்த்திக் கொண்டிருந்த தி.க.சி. சாகித்திய  அகாதமி பரிசு பெற்றபோது 'கால்காசு கடுதாசி - தி.க.சி யின் திறனாய்வுகள்' என்ற எனது கட்டுரையை காலச்சுவடு வெளியிட மறுத்தது;  காலச்சுவடு வெளியிட மறுத்த கட்டுரை என்று தனி வெளியீடாகக் கொண்டு வந்தேன். அருமையான பணி ஒன்றைச் செய்திருக்கிறீர்கள் என உளத்துடிப்பை,   உள்நாட்டு அஞ்சலில் நிறைத்து எழுதியிருந்தார்.

அவர் கவிஞர். கவிஞர் என்ற எல்லைக்குள் மட்டும் நின்றுவிடாத போராளி: கவிதை எல்லைகளும் தொடமுடியாத உயரத்தில் நின்ற மனிதன்.

# மீரா: காற்றின் முழக்கம்



*(செப்டம்பர் 1, கவிஞர் மீராவின் 22 ஆவது நினைவேந்தல்)*

இரண்டெழுத்துப்
பெயர்காரர்
நான்கெழுத்தில்
நிறுவி வைத்தார்
நற்றமிழ் ஏர் இரண்டு

பதிப்பக வயலில்
ஆழ உழுதார்
அறுவடை குவித்தார்
அதிர்வுகள் தந்தார்

பயணம் சென்ற
பாதைகள்தோறும்
புதுப்புது விதைகள்
தேடி விதைத்தார்

நூல் விளைச்சலில்
நூதனம் கண்டார்
எழுத்தின் விதைப்பில்
புதுமைகள் செய்தார்

அன்னம் அகரம்
அவரது அடையாளம்
எண்ணமும் செயலும்
அதுவென்றே இயங்கினார்

மொழி உரிமை
இன உரிமை
முதன்மையெனக் கொண்டார்
தமிழியத்தின் நோக்கினிலே
பொதுவுடைமை கண்டார்

எழுத்து இறகுகளை
இறக்கைகள் ஆக்கினார்
அன்னத்தின் விரலாலே
தொகுப்புச் சேணை தொட்டு வைத்தார்
புத்தக வானில் பறக்கச் செய்தார்

தமிழரின் சோவியத்
தமிழீழம் என்றார்
புலிகளின் எழுச்சியில்
புறநானூறு கண்டார்

திக்கற்ற
இளைஞருக்குத்
தென்திசையே
உனக்கான திசை என்றார்

பாவேந்தர் வழி நின்று
பைந்தமிழை நேசித்தார்
அவர் ஆசான் பாரதியைத்
தெய்வமென பூசித்தார்

அரசியல் பிழைத்தோரை
ஊசிகளால் குத்திச்சாய்த்தார்
கனவையும் கற்பனையையும்
காதல் ஆக்கினார்
கல்லூரித் தலைமுறை
அதை வேதமாக்கிக்
கொண்டாடி மகிழ்ந்தார்

தமிழர் திறம் பழித்தோரை
திராவிட நெருப்பு வரிகளால் சுட்டெரித்தார்

இறுதி முச்சு ினிலும்
இறைவனை மறுத்திருந்தார்
ஈரோட்டுக் கொள்கையிலே
உறுதியோடு வாழ்ந்திருந்தார்

மீரா!
எங்கள்
கலங்கரை விளக்கம்
காலத்தின் குரலானவர்
காற்றின் முழக்கத்தில்
கனன்று கொண்டிருக்கும்
கவிதைப் போராளி !

நன்றி: ''இனிய உதயம்' (செப்டம்பர் இதழில் வெளியானது.)

அருணாசுந்தரராசன்

# குயில்களுக்குத் தோழனான கவிதைப் போராளி

- மு.முருகேஷ்

மீரா, எனக்கு கவிஞராகத் தான் முதன்முதலில் அறிமுகமானார். கவிஞர் மீராவின் பெயர் தாங்கிய நூலெதுவும் கண்ணில் பட்டால் உடனே எடுத்து படிக்கத் தொடங்கி விடுவேன்.

கவிஞர் மீரா எழுதி 1971-இல் வெளியான 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்' காதல் கவிதை நூலை, 1984-இல் படிக்கையில் எனக்கு 15 வயது. திரைப்படப் பாடல்களில் இடம்பெற்ற பாடல் வரிகளையும், வெகுசன இதழ்களில் வெளியாகும் கவிதைத் துணுக்குகளையுமே காதல் கவிதையென எண்ணிவந்த எனக்கு, அந்த வயதில் நான் படித்த காதல் கவிதை நூல்களிலேயே ரொம்பவும் வித்தியாசமான நூலாக மீராவின் நூல் இருந்தது. அன்றிலிருந்தே மீராவின் கவிதைகள் மீது காதல் கொண்டேன்.

புதுக்கோட்டையிலிருந்த பேராசிரியரும் கவிஞருமான பாலா, கவிஞர் கந்தர்வன் ஆகியோருடனான உரையாடலில் தவிர்க்கவே முடியாமல் இடம்பெறும் பெயராக கவிஞர் மீராவின் பெயர் இருக்கும். இருவருமே மீராவின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள். இருவரது நூல்களையும் கவிஞர் மீரா தான் வெளியிட்டிருந்தார்.

அன்னம், அகரம் எனும் இரு வெளியீடுகளின் மூலமாக தமிழின் சிறப்புக்குரிய பல படைப்பாளுமைகளை வெளிக்கொண்டு வந்தவர் மீரா என்பதை பிறகுதான் அறிந்துகொண்டேன். கந்தர்வனின் முதல் கவிதை நூலான 'மீசைகள்' கவிதை நூல் தொடங்கி, 'பூவுக்குக் கீழே...' சிறுகதை நூல் உள்ளிட்ட அனைத்து நூல்களையுமே மீரா தான் கடைசிவரை வெளியிட்டு வந்தார்.



அதேபோல், கவிஞர் பாலாவின் கவிதைப் பக்கம், சர்ரியலிஸம் உள்ளிட்ட நூல்களையும், கவிஞர் நா.முத்துநிலவனின் 'புதிய மரபுகள்', கவிஞர் ஜீவியின் 'வானம் தொலைந்துவிடவில்லை' ஆகிய முதல் நூல்களையும் வெளியிட்ட பெருமை கவிஞர் மீராவையே சாரும்.

90-களில் வெளியான கந்தர்வனின் 'சிறைகள்' கவிதை நூலினைப் பெறவும், அறிவொளி இயக்க நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதற்காக அன்னம் பதிப்பகத்தின் நூற்பட்டியலைப் பெறவும் சிவகங்கை சென்று, கவிஞரை அவரது வீட்டிலேயே சந்திக்கும் பேறு பெற்றேன். மாடியில் வீடும், கீழே பதிப்பகமும் இயங்கிக் கொண்டிருந்தது. முன்னரே பாலப்பட்டி இலக்கிய முகாமில் பங்கேற்ற கவிஞர் மீராவோடு பேசி அறிமுகமாகியிருந்தேன். சிரித்த முகத்தோடு சற்றே கரகரப்பான அந்தக் குரலில், 'வாங்க... முருகேஷ்" என்று அன்போடு என்னை வரவேற்றார்.

யாரையும் அழைக்காமல் அவரே உள்ளே சென்று, ஒரு ஸ்டூல் மேல் ஏறி நின்று, பல நூல்களை எடுத்துவந்து என்னிடம் தந்தார். "இதெல்லாம் நீங்கள் படிக்க வேண்டிய நூல்கள்" என்றார்.

அப்போது தமிழில் ஹைக்கூ கவிதைகளை மிகுந்த ஆர்வத்தோடு எழுதிவந்த நான், "ஹைக்கூ நூல்கள் ஏதாவது இருக்கிறதா... சார்?" என்று கேட்டேன். அடுத்த சில நிமிடங்களில் என் முன்னே இதயகீதா எழுதிய 'தீயின் பிணம்' (1988), கழனியூரன் எழுதிய 'நட்சத்திர விழிகள்' (1990) ஹைக்கூ கவிதை நூல்களையும், தி.லீலாவதி மொழிபெயர்த்த 'ஜப்பானிய ஹைகூ' (1987) நூலும், நெல்லை சு.முத்துவின் 'தமிழில் ஹைகூ' (1994) நூலும் இருந்தன. ஆகா... என எல்லா நூல்களையும் அப்படியே அள்ளிக்கொண்டேன்.

1993-இல் வெளியான எனது 'விரல் நுனியில் வானம்' ஹைக்கூ நூலில், கவிஞருக்குப் பிடித்த சில ஹைக்கூ கவிதைகளைச் சொன்னதோடு, எது ஹைக்கூ இல்லை என்பதையும் என்னிடம் பகிர்ந்தார். எனக்குள் ஹைக்கூ குறித்த சரியான புரிதலை உண்டாக்கிய முக்கியச் சந்திப்பாக அன்றைய தினம் அர்த்தம் பெற்றது.

தமிழின் மிகச் சிறந்த கவிஞராக இருந்தும், தான் எழுதாமல் பிற படைப்பாளிகளின் படைப்புகளை வெளிக்கொண்டு வருவதிலேயே தனது நேரத்தைச் செலவிட்ட கவிஞர் மீரா. என் மனதில் பன்மடங்கு உயர்ந்து நின்றார்.

"சமீபத்தில் நான் எழுதிய ஹைக்கூ கவிதைகள் அன்னம் மூலமாக நூலாக வரணும்னு எனக்கொரு ஆசை" என்றேன் சற்றே தயக்கத்துடன். "தொகுத்து கொண்டு வாங்க... முருகேஷ். பார்க்கலாம்" என்றார். அவ்வாறே நான் தொகுத்த எனது ஹைக்கூ கவிதைகள் 1995-இல் கவிஞர் மீராவின் பெயரால் புதுக்கோட்டையில் பதிப்பகம் தொடங்கிய அண்ணன் மீரா சுந்தரின் 'மீரா பதிப்பகம்' மூலமாக 'என் இனிய ஹைக்கூ' எனும் நூலாக வெளிவந்து, பாரத ஸ்டேட் வங்கியின் பரிசினைப் பெற்றது.

ஜப்பானிய மரபுக்கவிதையான ஹைக்கூ வடிவத்தில் தமிழில் பல நூல்கள் வெளிவந்தன. பலரும் ஹைக்கூ எழுத முயன்றனர். கவிஞர் மீரா, ஹைக்கூ வடிவத்தைப் பின்பற்றாமல், அவருக்கே உரித்தான தனித்தன்மையுடன் 'குக்கூ' எனும் நூலை 2001-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்த நூலிலுள்ள குறுங்கவிதைகள், ஆங்கில கவிதை வடிவமான 'லிமரிக்' தன்மையுடன் விளங்கின. இந்தக் குறுங்கவிதைகளில் நகைச்சுவையும், சமூக எள்ளலும், சிந்தனைத் தெறிப்பும், பொறி பறக்கும் அரசியல் சாடலும் மிகுந்திருந்தன.

இந்த நூலில் 'குயில் இன்னும் கூவுகிறது' எனும் தலைப்பில் கவிக்கோ அப்துல் ரகுமானின் அணிந்துரையும், 'தமிழ்க் காற்றில் மீரா தீட்டிய புதுவர்ணம் குக்கூ' எனும் தலைப்பில் கவிஞர் பாலாவின் மதிப்புரையும் இடம்பெற்றன.

"ஜப்பானிய உடையுமில்லை. நடையுமி'ல்லை. மூன்று வரிச் சட்டங்களும் இல்லை. தமிழ்ச் சாயலோடு, தமிழ்ப் பாட்டு, தமிழ்க் காற்று - இவை 'ஹைகூ' என்று கூவுமா என்ன? குக்கூ என்றுதான் கூவும். மீரா மீரா தான்!" என்று பாலா இந்நூலை வரவேற்றார்.

இந்த 'குக்கூ' நூலினை இப்போது வாசித்தாலும், இதிலுள்ள கவிதைகளில் வெளிப்படும் சமூக உண்மை நம் நெஞ்சைச் சுடுவது நிச்சயம்.

'யாரோ வைத்த நெருப்பில்
ஏழைக் குடிசைகள் எரிந்தன;
வளரும் புகையில்
மாளிகை சில தெரிந்தன.'

எவ்வளவு பெரிய உண்மையைக் கவிஞர் புகைகளுக்கிடையேயும் நமக்குத் தெளிவாகக் காட்டி விடுகிறார்.

'குச்சிப் பயலுக்கு
கந்தகத் தலைப்பாகை சின்னதாய்

பிடித்திழுத்தால்
எரிந்து விழுகிறான் என்னமாய்!

விடுகதை போல வெளிப்படும் இந்தக் கவிதைக்கான பதில் என்னவென நம் எல்லோர் மனமும் அறிந்துகொள்வதில் வெற்றியடைகிறது.

‘விழும் போதெல்லாம்
மீசையில் ஒட்ட வேண்டும்
இந்தச் செம்மண்;
ஏனெனில் எம்மண்.’

- எனும் வரிகள், மீராவின் தாய் மண் பற்றினைப் பறைசாற்றுகிறது.

உலக உயிர்கள் அனைத்திற்கும் உண்டாவது பசி. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பர். இந்தப் பூமியில் பசியை வென்ற உயிரென்று ஒன்றேனும் உண்டா..? கவிஞர் மீரா எழுதியிருக்கும் இந்தக் குறுங்கவிதையில் பசியின் வேறொரு ரூபம் நமக்கு தரிசனமாகியுள்ளதைக் காணலாம்.

‘அழுக்கைத் தின்னும்
மீனைத் தின்னும்
கொக்கைத் தின்னும்
மனிதனைத் தின்னும் - பசி.’

கவிஞர் மீரா, படைப்பாளிகளைக் கொண்டாடிய படைப்பாளியாக வாழ்ந்தவர். எவரையும் கருத்தியல் ரீதியாக எதிர்கொள்வாரே தவிர, தனி மனித துவேஷம் யாரிடமும் கொண்டவரில்லை. எல்லோருக்கும் பிடித்த மனிதராக, மாணவர்கள் விரும்பும் பேராசிரியராக, நூலாசிரியர்கள் மதிக்கும் பதிப்பாளராக பன்முகம் காட்டி மிளிர்ந்த மீரா, ‘குக்கூ’வில் இப்படியொரு கவிதையையும் எழுதியுள்ளார்.

’வீடு கட்டினேன்
சுடு காட்டுக் கெதிரில்
எந்த நேரமும்
விடைபெறலாம் எளிதில்.’

2001-இல் வெளியான நூலில் இடம்பெற்றது இக்கவிதை. எழுதியதைப் போலவே 2002 செப்டம்பர் 1 அன்று இம்மண்ணுலக வாழ்விலிருந்து விடைபெற்றார் கவிஞர் மீரா.

கவிஞர் மீராவின் பெருமைகளை, சிறப்புகளை இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். பல நூல்களாக எழுதலாம். மரபுக்கவிதைகளில் வேரூன்றி, புதுக்கவிதைகளில் கிளைத்து, குறுங்கவிதைகளில் ஆழத்தடம் பதித்தவர். உரைநடைகளிலும் தனித்த முத்திரைப் பொறித்தவர் நம் கவிப்பேராசான் மீரா.

புகழ்மிக்க பதிப்பாளர், ‘கவி’ இதழின் ஆசிரியர், பேராசிரியர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து உரிமைகளுக்காகக் களமிறங்கிப் போராடியவர். இப்படியாகச் சொல்லிக்கொண்டே போகலாம். கவிஞர் மீராவின் மாணவராய், மீராவின் நேசத்துக்குரிய தோழராய், மீரா மறைந்து 22 ஆண்டுகளைக் கடந்திருக்கும் வேளையிலும் மீராவின் நினைவுகளை நெஞ்சில் சுமந்து, ஆண்டுதோறும் மீராவின் பெயராலேயே ‘கவிப்பேராசான் மீரா’ விருதினை வழங்கிவரும் அன்புத்தோழர், கவிஞர் அருணாசுந்தரராசனின் கவிதை வரிகளோடு இக்கட்டுரையை நிறைவு செய்வதே பொருத்தமாக இருக்கும்.

‘மீரா
எங்கள்
கலங்கரை விளக்கம்
காலத்தின் குரலானவர்
காற்றின் முழக்கத்தில்
கனன்று கொண்டிருக்கும்
கவிதைப் போராளி.’

## மீரா:

# இருந்தார்... இருக்கிறார்... இருப்பார்...!

சிவகங்கை தந்த
சிவப்பு நதி

மொழிப்போரை
முன்னெடுத்த மறவர்
சுயமரியாதைச் சிந்தனையாளர்

சிந்தனைகள்
சிவப்பாய் இருந்தன
சொல்லும்படி
சிறப்பாய் இருந்தன

திராவிடத்தில் மலர்ந்து
தீவிர மாக்சியத்தில் மணம் வீசியவர்
இவர் தனியரல்ல
இயக்கம்
இலக்கியமே
இலட்சியம்

வானம் பாடியின்
வண்ணச் சிறகு
மக்களையே வருடியது
மீராவின் எண்ணச் சிறகு

மீரா மண்ணில் முளைத்தவர்களே
முன்னணியினர்

கவிஞர்களை அடைகாத்த அன்னப் பறவை
எழுதியது குறைவு
எழுத வைத்ததே அதிகம்

சமூக நலம் காத்தன
மீராவின் ஊசிகள்
மூன்றும் ஆறும்
மீராவின் புகழ்
என்றும் கூறும்

கனவுகளும் கற்பனைகளும் காதலருக்கு
கவிதை வேதங்கள்

மீராவுக்கு இல்லை
முன்மாதிரி
மீராவே பலருக்கு முன்மாதிரி

இராசேந்திரன்
மீரா ஆனார்
பெயர் சுருங்கியது
புகழ் விரிந்தது

நீரை விலக்கி
பாலைப் பருகும் அன்னம்
நல்ல கவிதைகளையே நூலாக்கித் தந்தது
அன்னம்

மீராவின் அகரம்
மற்றவருக்குச் சிகரம்
சமூகத்தைச் செப்பனிட்ட
சிற்பி
சிற்பியும் விருதளித்துச் சிறப்பித்தார்

எங்கள் மீரா
இறக்கவில்லை
இருந்தார்
இருக்கிறார்
இருப்பார்...!



பொன். குமார்

# மீராவிடம் கற்றதும்... பெற்றதும்


## எழுத்தாளர் சுஜாதா

'நீ முதல் முறை என்னைத்
தலைசாய்த்துக்
கடைக்கண்ணால் பார்த்தபோது
என் உள்ளத்தில்
முள் பாய்ந்தது
அதை இன்னும் எடுக்கவில்லை
முள்ளை முள்ளால்தானே எடுக்க வேண்டும்
எங்கே இன்னொரு முறை பார்'

இதுபோல் இன்று நூற்றுக்கணக்கில் எழுதப்படுகின்றவைக்கு ஆதிகாரணர் அண்மையில் காலமான கவிஞர் மீரா. கனவுகள்+ கற்பனைகள்= காகிதங்கள் என்ற தொகுப்பில் உள்ளது இந்தக் கவிதை. சிவகங்கை மன்னர் கல்லூரி, மதுரை தியாகராஜர் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். ஆசிரியர்களின் உரிமைகளுக்குப் போராடினவர். பென்குவின் போல் அன்னம் என்கிற நல்ல பதிப்பகத்தைத் துவக்கிய மீராவுடைய,

'உனக்கும் எனக்கும்
ஒரே ஊர்
வாசுதேவநல்லூர்' புதுக்கவிதையின் அங்கதச் சுவைக்கு மகத்தான எடுத்துக்காட்டு.
இன்றைய தலைமுறைக்கு மீண்டும் அந்தக் கவிதை:

'உனக்கும் எனக்கும்
ஒரே ஊர்
வாசுதேவநல்லூர்
நீயும் நானும்
ஒரே மதம்
திருநெல்வேலிச்
சைவப் பிள்ளைமார்
வகுப்பும் கூட
உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும் சொந்தக்காரர்கள்
மைத்துனன்மார்
எனவே செம்புலப் பெயர் நீர் போல்
அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே'



இக்கவிதை மீராவின் 'ஊசிகள்' என்கிற தொகுப்பில் வந்தது. 'யாயும் ஞாயும் யாராகியரோ' என்கிற குறுந்தொகை கவிதை தெரிந்தால் இந்தக் கவிதையின் உட்பொருள் புரியும். சங்ககால கலாச்சாரத்திலிருந்து எப்படிப்பட்ட 'சண்டே மேட்ரிமோனிய' லுக்கு வந்துவிட்டோம் என்பதை உணர முடியும்.

மீரா எழுதிய நூற்றுக்கணக்கான காதல் கவிதைகள் முப்பது ஆண்டுகள் கழித்தும் மேற்கோள் காட்டப்படுகின்றன.

(நன்றி: ஆனந்த விகடன் 10.11.2002)

# தமிழுக்கு அன்னம் இட்ட கை!

மு. மேத்தா

அப்துல் ரகுமான் என் வலது கண். சிற்பி என் இடது கண். இன்குலாப் என் இடது கை. நா. காமராசன் என் வலது கை. பாலாவும் மேத்தாவும் என் இதயத்தின் இரு பக்கங்கள். வைரமுத்து, தமிழன்பன், சிதம்பரநாதன், முருகு சுந்தரம், அபி, தேனரசன், புவியரசு, தமிழ்நாடன், தணிகைச் செல்வன், இந்திரன், காசி ஆனந்தன், நவகவி, கல்யாண்ஜி, கலாப்ரியா, கந்தர்வன், அறிவுமதி, நாஞ்சில் ஆரிது, வைகைவாணன், அப்துல் காதர், இக்பால், பஞ்சு, ரவி சுப்ரமணியன், வசந்தகுமார் இவர்கள் எல்லாம் என் அங்கங்களைப்போல என்னுள் நிறைந்திருக்கிறார்கள். எனவே நான் நான் அல்ல; நான் எல்லோரும் கலந்த ஓர் அவதாரம். ஆமாம் நான் செத்தாலும் வாழ்வேன் என்று சில மாதங்களுக்கு முன் தனது புத்தகத்திற்கு முன்னுரை எழுதிய கவிஞர் மீரா இன்று இல்லை.

கடந்த முப்பது ஆண்டுகளாக இலக்கியப் பிரமுகர்கள் அனைவருக்குமே "அன்னம்" இட்ட மீராவின் மரணம் கேட்டு தமிழ்க் கவிதையுலகமே கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது.

நல்ல மனிதனாக இருப்பவன் தான் நல்ல கவிஞனாகவும் இருக்க முடியும். அப்படி இருந்தவர் மீரா. மூத்த கவிஞர்களை எப்போதும் மதித்தார். இளைய கவிஞர்களை அன்போடு வளர்த்தார். புதிதாகப் புத்தகம் கொண்டுவர விரும்பியவர்கள் எல்லோருக்கும் மீரா தான் பாலம். அவரது அன்னம் புத்தக நிலையத்துக்குத் தமிழன்னையின் நூலகத்தில் தனி அலமாரியே அமைக்க வேண்டும். அந்த அளவுக்குப் பொக்கிஷங்களைப் பதிப்பித்தவர்.

ஒரு கவிஞன் ஒப்பனை செய்து உலா வருகிற மேடை நடிகன் மட்டுமல்ல. பிரச்சனைகளைப் பற்றி என் கவிதை பேசும். அது போதும் என்று அவன் தட்டிக் கழித்து விட முடியாது. எந்தப் பிரச்சனைக்காக அவன் கவிதை இருக்கிறதோ அதற்காகக் கவிஞனும் போராட வேண்டும். மீரா அப்படித்தான் இருந்தார். இதுவரை நடந்த அனைத்து ஆசிரியர் போராட்டத்திலும் கலந்து கொண்டு முழுப் போராளியாக வாழ்ந்தார்.

கவிஞர்கள் ஓரிருவர் கூட ஒன்று சேர மாட்டார்கள் என்ற குறைபாடு உண்டு. ஆனால் மீரா எப்போதும் கவிஞர்களை ஒன்று சேர்ப்பதிலேயே குறியாக இருந்தார். தமிழ்க் கவிஞர் பேரவையை நான் உருவாக்கியபோது நிறைய உதவி செய்தார். மாமல்லபுரத்துக்குப் பக்கத்தில் கவிஞர்கள் ஒருசேர வாழும் கவிதா மண்டலம் அமைக்க வேண்டும் என்று விரும்பியவர் அவர்.

முப்பது ஆண்டுகளாக உற்சாகமாகக் கவிதை உலா நடத்தி வந்தவருக்கு சமீப காலமாக உடல் நலமில்லாமல் போனது. இரண்டு மாதத்துக்குமுன் 'கவிக்கோ' விருது வாங்க சிவகங்கையிலிருந்து சென்னை வந்தார். எங்களோடே தங்கியிருந்தார். அப்துல் ரகுமான், பொன். செல்வகணபதி, நான் அனைவரும் சேர்ந்து தினமும் மீராவுடன் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். இந்த இரண்டு மாதமும் உற்சாகமாக இருந்தார். சென்னையில் தங்கிவிடுங்கள்... என்று சொல்லி அவருக்கு வீடு பார்த்தோம். ஆனால் எங்களிடம் சொல்லிக் கொள்ளாமலேயே சிவகங்கைக்குப் போனவர்... எல்லோரையும் விட்டு மறைந்தே போய்விட்டார்.



தனித்தனியாய்... தனித்தனியாய்... தன்னந்தனியாய் என்ற தலைப்பில் காவியம் எழுத இருப்பதாகச் சொன்ன மீரா என்னால் முடியாவிட்டால் என் சக கவிஞர்களில் யாராவது எழுதுவார்கள் என்று அறிவித்திருந்தார். அந்தக் காவியத்தை இப்போது யார் எழுதுவது ?

# மீராவை இனி எப்போது பார்ப்பேன்

அய்யப்ப மாதவன்

எனக்கு அப்போது வயது 27 இருக்கும். இலக்கியம் பற்றி எதுவுமே தெரியாது. இலக்கியத்திற்குள் வருவேன் என்றும் தெரியாது. இப்போது நினைத்துப் பார்த்தால் பெரும் மலைப்பாக இருக்கிறது. ஒரு கவிஞனாய் ஏன் மாற வேண்டும். அதற்கு யார் வழி வகுத்தனர் என்பதற்கு கதைகள் இருக்கின்றன.

என் பால்ய நண்பன் செழியனுக்கு எனக்கு முன்பே கவிதை பற்றித் தெரியும். கவிதை எழுதவும் தெரியும். கவிஞர் மீராவையும் தெரியும். எனக்கு எதுவுமே தெரியாது. நான் இலக்கியம் குறித்து ஒன்றும் அறியாதவனாக இருந்தேன்.

செழியன் அவன் கவிதைகளை வாசித்துக் காட்டியபோது அவை என்னைச் சொல்ல முடியாத உணர்விற்குள் அழைத்துப் போயின. நான் அப்போதுதான் வாழத் தொடங்கியது போன்ற உணர்ச்சிகளில் மிதந்தேன். ஒரு கவிதை என்ன செய்யுமென்பதை முதன்முதலாய் அறிந்துகொண்ட காலமது.

செழியன் கவிதைகளை வாசித்து முடித்த பின் சிறு நகரத்தின் செம்மண் புழுதி படிந்த வீதிகளில் அழைத்துப் போனான். எங்கே என்று சொல்லாமல் யாரைப் பார்க்கப் போகிறோம் என்று தெரிவிக்காமல் ஒருவித நிச்சயமின்மையுடன் அழைத்துப்போனான்.

நீண்டு வளைந்து சென்ற தெருக்கள் ஓர் இடத்தில் பெரிய குளத்தைக் காட்டின. அது ஒரு மிகப் பெரிய சதுர வடிவில் இருந்தது. உள்ளே ஆண்களும் பெண்களும் குளித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அக்குளத்தின் எதிர்புற சாலை முனையில் ஒரு வீடு இருந்தது. என்னை அதனுள்ளே கூட்டிச் சென்றான்.

என் கண்கள் அவர் அமர்ந்திருந்த அறை முழுக்க நூல்கள் அடுக்கப்பட்டிருந்ததை ஆச்சர்யம் பொங்க பார்த்துக்கொண்டிருந்தன. அந்த நூல்களுக்கிடையேதான் நான் இதுவரை அறிந்திராத மாபெரும் இடதுசாரிக் கவிஞர் மீரா அமர்ந்திருந்தார்.

தூக்கி வாரிச் சீவிய தலைமுடியுடன் முகத்தை அழகாக்கிய கண்ணாடியில் தான் தயாரித்த நூலொன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார். செழியனைப் பார்த்ததும் வாங்க செழியன் என்றதும் "வணக்கம் சார்" என்று சொல்லிவிட்டு "இவன் என் நண்பன் அய்யப்பன்" என்று அறிமுகப்படுத்தினான். நான் அவருக்கு என் முதல் வணக்கத்தைச் சொன்னதும் "என்ன செய்றீங்க" என்றார்.



ஜவுளித்துறை சம்பந்தமாக படித்திருக்கிறேன், வேலை தேடிக்கொண்டிருக்கிறேன் என்றேன். "மகிழ்ச்சி, சீக்கிரம் ஒரு வேலையில் சேர்ந்து குடும்பத்திற்கு உதவியாய் இருங்க" என்று சொன்னார். சரியென்று தலை அசைத்தேன்.

பிறகு நானும் செழியனும் வெளியில் வந்தோம். மாடியிலிருந்து கவிஞர் மீராவின் இரண்டாவது மகன் கதிர் இறங்கி வந்து எங்களைப் பார்த்தான். "என்னடா செழியா யார்டா இது" என்றான். "அய்யப்பன்" என்று அறிமுகம் செய்து வைத்தான். அன்றிலிருந்து நாங்கள் மூவரும் நெருங்கிய நண்பர்களானோம் என்பது வேறு கதை.

கவிஞர் மீராவின் கனவுகள்+கற்பனைகள் = காகிதங்கள் என்ற நூலினைப் படிக்காதவர்கள் மிகக் குறைந்த அளவே

இருக்கக்கூடும். அந்தளவிற்கு அந்த நூல் அவ்வளவு பிரபலம். நானும் அதை வாங்கிப் படித்துக்கொண்டிருந்தேன். அந்த வயதில் அந்தக் கவிதைகள் எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை வார்த்தைகளால் எடுத்துரைக்க முடியாது.

கவிஞர் மீரா மிக எளிய மனிதர். அவர் கவிதைளும் மிக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கும். அதனாலேயே அவரது கவிதைகள் தமிழிருக்கும் இடமெல்லாம் சென்று சேர்ந்தன. என்னைப் போன்ற எத்தனையோ பேர் கவிஞர் மீராவின் தொடர்ச்சியாக எழுத வந்தவர்களென்பதில் மாற்றுக் கருத்து இருக்கப் போவதில்லை.

கவிஞர் மீரா சிவகங்கை கல்லூரியில் தமிழ்துறையின் தலைமைப் பொறுப்பிலிருந்தார். அங்கும் அவர் மாணவர்களுக்கு இலக்கியம் குறித்து கற்பித்தாரென்பதை சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். கல்லூரியில் பணி புரிந்துகொண்டு அன்னம் பதிப்பகத்தை மிகச் சிறந்த முறையில் நடத்தி வந்தார். தமிழின் மிக முக்கிய படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை மிக அழகாகப் பதிப்பித்து உலகம் அறியச் செய்தார்.

இன்று பிரபலமாக அறியப்படும் ஜெயமோகன் முதல் அப்துல்ரகுமான், கல்யாண்ஜி, விக்ரமாதித்யன், கலாப்ரியா, எஸ். வெட்கட்ராம், எஸ்.வி. ராஜதுரை, இந்திரன், அபி இன்னும் எண்ணற்ற நவீன படைப்பாளிகளைத் தமிழுக்கு கொண்டு வந்த பெருமை கவிஞர் மீராவையே சாரும்.

என்னைப் போன்ற கவிஞர்கள் நிறைய பேர் மீரா பதிப்பித்த நூல்கள் படித்து அவற்றின் தூண்டுதலில் கவிஞர்களாகவும் கதையாசிரியர்களாகவும் கட்டுரையாளர்களாகவும் புனைகதை எழுத்தாளர்களாகவும் மொழிபெயர்ப்பாளர்களாவும் உருவாகினர்.

அப்படித்தான் நான் கவிஞர் மீரா தமிழில் கொண்டு வந்திருந்த ஜப்பானிய ஹைகூ கவிதைகளைப் பெரும் ஆவலுடன் படிக்கத் தொடங்கினேன். அக்கவிதைகள் என்னை மிகவும் ஈர்த்தன. அதன் விளைவாய் நானும் மூன்று வரி ஜப்பானிய ஹைகூ கவிதைகளைத் தமிழில் எழுதிப் பார்த்தேன். நிறைய எழுதி எழுதி அவ்வப்போது அவரிடம் காட்டுவேன். அவரும் தொடர்ந்து எழுதுங்கள் என்று சொல்லி உற்சாகப் படுத்தினார். அவர் கொண்டு வந்த மாத இதழ் அன்னம் விடு தூதுவில் என் சில கவிதைகளைப் பிரசுரித்தார்.

அவர் பாராட்டி பிரசுரித்த கவிதை

மனிதனே...
அறுவடையைத் தள்ளிப்போடு
பறவைகள் பசியாறட்டும்.

அவர் பாராட்டிய கவிதைகளை எல்லாம் தொகுத்து என் முதல் கவிதை நூலை அவருடைய பதிப்பகத்திலேயே கொண்டு வந்தேன். “ தீயின் பிணம்” என்ற ஹைகூ கவிதை நூல் வெளியீட்டை அவர் அலுவலகத்திற்கு எதிரிலேயே நடத்தினேன். ஆனால் எனக்குப் பிடித்த மீரா வரவில்லை. அட்டைப் படம் சரியாக வரவில்லை என்று விவரம் புரியாமல் அவரிடம் கோபித்துக்கொண்டேன். அதனால்தான் அவர் வரவில்லையென நினைத்துக்கொண்டேன்.

பிறகு தொடர்ச்சியாக நான்கு கவிதை நூல்கள் அன்னம் வெளியீடாக வந்தன. அன்னம் பதிப்பகத்தின் மூலமாகத்தான் நான் கவிஞனாக உலகிற்கு அறிமுகமானேன். மீராவின் மகன் கதிர் என் நூல்கள் வருவதற்கு உந்துதலாக இருந்தார்.

மீரா காலை எழுந்ததும் வேட்டி சட்டையுடன் தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு சிவகங்கை பேருந்து நிலையம் சென்று மதுரைக்குப் பேருந்தில் கிளம்பிவிடுவார். எப்போதும் மதுரைக்கும் சிவகங்கைக்கும் போய் வந்துகொண்டே இருப்பார். அங்குதான் புத்தகம் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களைத் தரம் பார்த்து வாங்கி வருவார். ஒவ்வொரு நூலையும் அவ்வளவு தரமானதாக ட்ரடில் மிஷினில் அடித்துக் கொண்டே வருவார். ஒவ்வொரு நூலையும் தன் மேற்பார்வையில் மிக அற்புதமாக வடிவமைத்துக் கொண்டு வருவார்.

*மீரா வாழ்ந்த சிவன்கோயில் தெரு என் வாழ்விலே மறக்க முடியாத ஒரு தெரு. இப்போது மீரா வாழ்ந்த இடத்தில் எதுவுமில்லை. அவரின் அடையாளமாக இருந்த அந்த வீடு வேறொரு வடிவத்திற்கு மாறிவிட்டது. எங்களுக்குப் பிடித்த மீரா எங்களை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டார்.*

*ஒரு நாள் செழியன் அழைத்து மீராவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போனது குறித்துச் சொன்னான். எனக்கோ மிகப் பெரும் அதிர்ச்சி. அவர் எப்போதுமே நலமுடன் இருந்தார். ஏன் என குழம்பிப் போனேன். சென்னையிலிருந்து சிவகங்கை வந்திருந்தபோது அவரை அவரது வீட்டு மாடியில் சென்று பார்த்தேன். என்னால் அவரை அப்படிப் பார்க்க முடியவில்லை. அவரால் பேசுவதற்குக் கூட முடியவில்லை. வேட்டி நுனியைக் கையில் பிடித்துக்கொண்டு மிக அழகாய் அவர் நடந்து சென்ற சிவகங்கை வீதிகள் அவரின்றி வெறிச்சோடிப் போயிருந்தன. அவர் பயன்படுத்திய சைக்கிள் அவரில்லாத அவரைப் போன்ற அமைதியில் அவரது முகப்பில் நின்றுகொண்டிருந்தது.*


*கவிக்கோ அப்துல்ரகுமான் கவிஞர் மீராவுக்கு கலைஞர் தலைமையில் மிகப் பெரும் கூட்டமொன்றை சென்னையில் நடத்தினார். கூட்டம் முடிந்து வெளியில் வந்ததும் என்னைக் கண்டு நலம் விசாரித்தார். என் வேலையைப் பற்றி விசாரித்தார். எப்போதும் எந்நிலையிலும் அடுத்தவர் நலனில் அக்கறை செலுத்தும் மீராவை இனி எப்போது பார்ப்பேன்.*

*கவிஞர் மீரா நம் காலத்தின் கவிதை நாயகன். அவரது கவிதைகளில் மீராவின் இதயம் துடித்துக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கும் கேட்டுக்கொண்டிருக்கக் கூடும்.*









# இடையூறாய்...

அழ. பகீரதன்
இலங்கை

நேர்ந்திடும் எனப்
பல்லாண்டு காத்து
ஊர் அமைந்த கோயிலில்
சீர் திகழ இன்று வந்து
வாசல் அண்டி நிற்க,

தேர் ஏற சுவாமி காவி
அரோகரா கோசமிட
நாற்புறமும் யாபேரும்
பார்த்திருக்க
பூச்சிந்த பூரித்து,
பரவசிக்க
தேர் இருத்தி மீண்டார்
தோள் கொண்டார்

கரம் கூப்பிய மங்கையர்
மகிழ
யார் கண்டார்
ஆர் நவின்றார்
பேர் ஒளி பரவிற்று

புறம் வடம் நீள இடையே
குன்றுகள் எனத்
தேங்காய்க் குவியல்கள்
விடலைப் பருவத்து
நினைவை மீட்டிக்
காத்தேன் சற்றே...


படபட கடகட வென
ஒலிப்பில்
திடமிகு கை வலிமை காட்ட
உடலது வியர்க்க
திமிறும் தசைகள்...
திசை எங்கும் கண்கள் மொய்க்கும்!

ஆர்க்கும் ஒலிப்பை மேவி
ஆர் அங்கே அலறுவது
இலயிப்பைக் குலைக்கும்
கதையளப்பு!
ஈர்பத்துப் பட்டம் வாங்கி
தம் குரல் ஒலிப்பில்
ஊர் அமைதி குலைக்கும்
உத்தமர்களோ?
குரல் மேன்மை காட்ட
இதுவோ நேரம்?

ஊர் கூடி இழுக்க
தேர் ஓடும் வீதியினில்
அரோகரா எனும் ஒலிப்பொடு
அண்ணாந்து பார்க்க
ஆரோகணிக்க
ஒன்றிப்பில் நாமிருக்க
இடையூறாய்
ஏனிந்த ஒலிபெருக்கி?

என் அகம் அதில்
உலகு உறையும்
இப்போதில்
ஈகமென ஏன் அலறுவர்?

மடை பரப்பி வழிபட்ட
மரபை மாற்றிக்
குடை பிடித்த குருக்கள்
ஓதிடும் வடமொழி
மேவிட
நித்தமும் சத்தமே
சங்கடமாய்...



# 'கவிப்பேராசான்' மீரா விருதாளர்கள்

## 2013- 2023


பாரதிவசந்தன் -2013


கோ. மகேசன் -2013


எல். பிரைட் -2013


கூ.இரா. அம்மாசைப்பன் -2014


மு. கீதா -2015


கிரேஸ் பிரதிபா -2015


மு. முருகேஷ் -2018


பரிணாமன் -2019


ஜெயபாஸ்கரன் -2020


முனைவர் தமிழரசி -2021


சுகன்யா ஞானசூரி -2022


மறத்தமிழ்வேந்தன்-2022


அய்யப்ப மாதவன் -2023